பக்கங்கள்-16 ஆனி,28.2015 விலை-30.00







நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -127

## வடமாகாணசபையின் செயற்பாட்டிற்கு முரணாகச் செயற்படும் வவுனியா அரச அதிபர் - ப.சத்தியலிங்கம்



## தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இராஜதந்திர நகர்வுகள்



## கிழக்கு மாகாண அரசியலும், அதன் பின்னணியும்






-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# வடமாகாணசபையின் செயற்பாட்டிற்கு முரணாகச் செயற்படும் வவுனியா அரச அதிபர்

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பதாகவே வடமாகாணசபையைப் பிரதிபலிக்கின்ற வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர அவர்களை இடமாற்றக்கோரி மஹிந்த அரசிற்கு கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தனர். அதாவது பந்துல ஹரிச்சந்திர அவர்கள் ஒரு அரசியல் நியமனமாகவே வவுனியா பிரதேசத்திற்கு மஹிந்த அரசினால் திட்டமிட்டே நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரையும் அவரது செயற்பாடுகளில் மாற்றம் எதனையும் அவதானிக்க முடியவில்லை.

மஹிந்தவின் ஆட்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் இவரை இடமாற்றம் செய்ய இயலாமல் போனது. இதுவரையிலும் இவ் அரச அதிபரை இடமாற்றுவதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலவழிகளில் முயன்றும் அது கைகூடவில்லை.

இதற்குக் காரணம் மஹிந்த அவர்களின் ஆட்சி கொடுங்கோலாட்சியாகும். நிலைமைகள் இவ்வாறிருக்க, வடமாகாணசபை நிறுவப்பட்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் மைத்திரிபால சிறிசேன அவர்களை பழைய பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்தித்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உயர் மட்டக்குழு மக்களின் மீள்குடியேற்றம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோர், காணி விடுவிப்பு, இனப்பிரச்சினைக்கான தீர்வு, வடமாகாண ஆளுநர், அதன் பிரதம செயலாளர் இடமாற்றம் போன்ற பல்வேறான கோரிக்கைகளை அவரிடம்முன்வைத்தது. இதில் வடக்கின் ஆளுநரும், அதன் பிரதம செயலாளரும் மாற்றப்பட்டிருக்கிறார்களே தவிர ஏனைய கோரிக்கைகள் இன்னமும் முழுமையாக மைத்திரி அரசினால் நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் வடபகுதியில் இன்னமும் பல்வேறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதனடிப்படையின் கீழ் காணிப்பிரச்சினை, குடிநீர்பிரச்சினை, பாதைகள் புனரமைப்பு, இராணுவ முகாம் பிரச்சினைகள் இவ்வாறு மக்கள் மத்தியில் பல்வேறான அடிப்படைப் பிரச்சினைகள் காணப்படுகிறது. நிலைமை இவ்வாறு இருக்க வவுனியா மாவட்டத்தினைப் பிரதிபலிக்கின்ற அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர அவர்கள் மக்கள் பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கான தீர்வுகள் தொடர்பில் கரிசனையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை.

இவரது குறிக்கோள் என்னவென்றால், தமிழர் பகுதிகளில், கரையோர பிரதேசங்களில் சிங்கள மக்களை மீள்குடியேற்றம் செய்வதே ஆகும். அதனையே அவர் தற்பொழுதும் முன்னெடுத்துவருகின்றார். இதனை விட பாரிய பிரச்சினை என்னவென்றால் வடமாகாணசபையின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாகவும், மக்கள் பிரதிநிதிகளுக்கு மதிப்பளிக்கத் தெரியாதவராகவும் இவரது செயற்பாடுகள் அமைகின்றன. இதனையடுத்தே வன்னியினைப் பிரதிபலிக்கும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், வடமாகாணசபையினைச்சேர்ந்த நால்வரும் அடங்கலாக இக்கடிதத்தினை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்திருக்கின்றனர். மக்கள்பிரதிநிதி ஒருவரை மதிப்பளிக்கத்தெரியாத ஒரு அரச அதிபர் இந்த மண்ணுக்கு தேவையில்லை என்பதே மக்களது ஆதங்கமாகும். இவ்விடயம் தொடர்பில் வடக்கின் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குறிப்பிடுகையில்,

குறிப்பாக வடமாகாணசபையின் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் அவர்களுக்கு வவுனியா மாவட்ட அரச அதிபர் மதிப்பளிக்கவில்லை என்பது ஒரு தூண்டுதலாக இருக்கிறதே தவிர இதைவிட நிறைய பிரச்சினைகள் இவர் மீது இருக்கின்றது. முழுமையாக இவர் மாகாணசபைக்கு மதிப்பளிப்பதும் இல்லை. அதன் செயற்பாடுகளுக்கு இவர் இணங்கிப்போவதுமில்லை. மாகாணசபை 2013ம் ஆண்டு 12ம் மாதம் பொறுப்பேற்றது. வடமாகாணசபை பொறுப்பேற்று இரண்டு மாதங்களில் முதலமைச்சரின் உத்தரவுக்கமைய ஒரு கடிதம் ஒன்றினை வவுனியா அரச அதிபருக்கு அனுப்பியிருந்தேன்.

அனைத்து திணைக்களங்களினதும் பிரச்சினைகளை அறிந்து அதற்கு மாகாணசபை ஒரு தீர்வினைக்கொண்டுவரும் திட்டம் தான் அது. அதாவது அனைத்து திணைக்களப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடுவதற்கானதொரு சந்திப்பனை ஒழுங்குபடுத்தித்தருமாறு கோரியிருந்தேன். அதற்கு அவர் அப்படியொரு சந்திப்புத் தேவையில்லை என பதிலளித்திருந்தார். அதன்பின்னர் மத்திய அரசாங்கத்தின் கீழ்வரக்கூடிய பிரதேச செயலாளர்களுடன் கதைத்து சந்திப்பொன்றுக்கு ஒழுங்குசெய்தோம். அதாவது மத்திய அரசு அல்லது மாகாணசபை இரண்டும் மக்களுக்காகவே சேவையாற்றுகின்றது.

மக்களுக்கானதொரு சேவை சென்றடைய வேண்டுமாயின் நாம் மத்திய அரசு அல்லது மாகாண சபைகள் எனக்கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அடுத்த பிரச்சினை என்னவென்றால், வடமாகாணசபையினால் புளியங்குளத்தில் ஒரு நடமாடும் சேவையினை ஒழுங்குபடுத்தியிருந்தோம். அதற்கு அனைத்து அரச சேவை அதிகாரிகளையும் ஒழுங்குபடுத்தித்தருமாறு பணித்திருந்தோம். அதற்கு வவுனியா அரச அதிபர் அவ்வாறானதொரு விடயம் தேவையில்லை எனத்தெரிவித்திருந்தார். நாங்கள் அதனை முன்பே செய்துவிட்டோம் எனவும், மாகாண சபைகள் அதனை தற்பொழுது செய்ய அவசியம் இல்லை எனக்கூறியிருந்தார்.

அதனையும்தாண்டி இந்த நடமாடும் சேவையினை மேற்கொள்ள ஒழுங்குபடுத்தியிருந்தபோதிலும் அதற்கு முதல்நாள் இந்த நடமாடும் சேவையில் அரச ஊழியர்கள் ஒருவரும் கலந்துகொள்ளக்கூடாது என உத்தரவிட்டிருந்தார். கிராம உத்தியோகத்தர்கள் கூட இதில் பங்குபற்றவில்லை. மூன்றாவது விடயமாக, வித்தியாவின் படுகொலையின் பின்னர் பெண்கள் அபிவிருத்தி, பெண்கள் வெளிவிவகார அமைச்சுஎனது அமைச்சின் கீழ் உட்பட்டமையின் காரணத்தினால் முதலமைச்சரின் உத்தரவின்பேரில் அரச மற்றும் அரசசார்பற்ற திணைக்களங்கள், பெண்கள் அமைப்புக்கள் என்பவற்றினை ஒன்றுதிரட்டி எவ்வாறு இதனை தடுத்துநிறுத்தலாம் என்பது தொடர்பாக ஒரு சந்திப்பினை ஒழுங்குபடுத்தித்தருமாறறு வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவிடம் கூற, அதற்கு அவர், இரண்டு கிழமைகளின் பின்னர் பதில் அனுப்பியிருந்தார். சிவில் பாதுகாப்பு கூட்டமொன்று இருக்கிறது. முடியுமாயின் அதற்குவருமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் ஒரு மாகாண அமைச்சர். முதலமைச்சரின் கட்டளைப்படி நான் அதை இவரிடம் கேட்டேன். இதனை அவர் அலட்சியம் செய்துவிட்டார். டக்ளஸ் தேவானந்தா அல்லது வேறு அரச அமைச்சர்கள் எவரினதும் ஒரு கட்டளையை நிறைவேற்றாத பட்சத்தில் இவருக்கு என்ன நடந்திருக்கும் என்பது தெரிந்திருக்கும். இப்படிப்பட்ட இவருக்கு மக்களும், வடமாகாண சபையாகிய நாமும் எவ்வாறான தீர்ப்பினை வழங்கவேண்டும். மக்களும், வடமாகாணசபையும் சிந்திக்கவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவரது அரசியல் எங்களுக்குத் தேவையில்லை. இவர் அரசியல் பின்னணியில் வந்தவராக இருக்கலாம். எங்களுக்குத்தேவை மக்களுடைய பிரச்சினைகளைக் கையாளக்கூடிய ஒரு பிரதிநிதியே.




மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் இணைந்து வேலைத் திட்டங்களை மேற்கொண்டதன் காரணமாக நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எங்களைக் கொழும்பிற்கு அழைத்து கூறியதாவது, எந்தவொரு அரசியல் பாகுபாடும் இருக்கக்கூடாது. மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் என மக்களுக்குத் தெரியாது. மக்களுக்குத்தேவை சேவையாகும். மாகாண சபைகள் மத்திய அரசினைப் பலப்படுத்தவேண்டும். மத்திய அரசு மாகாணசபையினைப்பலப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி அவ்வாறு கூறுவாராகவிருந்தால் அவருக்குக்கீழ் கடமையாற்றுபவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும். இவர்மஹிந்த அரசின் எடுபிடி என்கின்ற காரணத்தினால் தமிழ் மக்களை வேண்டுமென்று பழிவாங்கும் நோக்கிலேயே இவரது செயற்பாடுகள் தனிப்பட்ட முறையில் அமையப்பெற்றுள்ளது. பொதுவாகக் கூறப்போனால் இவர் வடமாகாண சபைகளின் நடவடிக்கைகளுக்கு நூற்றுக்கு நூறு விகிதம் ஒத்துழைப்பினை வழங்குவதில்லை.

இவருக்கு பின்புலத்தில் அரசியல் இருந்தாலும் நமக்குப்பிரச்சினை அதுவல்ல. இவர்ஒருசிங்களஇனத்தவராக இருந்துகொண்டு தமிழினத்திற்கு துரோகத்தினை இழைத்துவருகின்றாரே தவிர, இவரைப்போன்ற சிங்கள இனத்தவர்கள் அரச அதிபர்களாக கடமையாற்றியிருக்கின்றார்கள். அவர்கள் இவ்வாறு நடந்துகொள்ளவில்லை. குறிப்பாகச்சொல்லப்போனால் மன்னாரைப் பிரதிபலிக்கும் அரச அதிபர் ஒரு சிங்களவர். அவர் எம்மோடு இணைந்து செயற்படுகின்றார்.

ஏனைய மூன்று மாவட்டங்களிலுமுள்ள அரச அதிபர்கள் எம்முடன் இணைந்து செயற்படுகின்றார்கள். இவருக்கு மாத்திரம் ஏன் அவ்வாறு எம்முடன் இணைந்து செயற்படமுடியாது? இதில் வவுனியா அரச அதிபர் தனது தனிப்பட்ட இனத்துவேசத்தினை வெளிப்படுத்துகின்றார். ஒரு அமைச்சர் குறிப்பிட்டு ஒரு சந்திப்பினை ஒழுங்குபடுத்தித்தராத அரச அதிபரின் தரத்தினைப்பார்க்கின்றபொழுது, மாகாண அமைச்சர் 12வது இடத்திலும், ஒரு அரச அதிபர் 28வது இடத்திலும் இருக்கின்றனர். ஒரு முதலமைச்சரையோ, அமைச்சரையோ கண்டால் மரியாதை செலுத்தவேண்டியவர்தான் அரச அதிபர் தரத்திலுள்ளவர்.



அரச அதிகாரிகளின் உயர் மட்டப் பதவிகளில் எங்களை விடவும் 15 இடம் குறைவாகவே இருக்கின்றார். எங்களைக்கண்டவுடன் எழுந்து மரியாதை செய்யவேண்டும் என நாம் இவரிடம் கேட்கவில்லை. மக்களுடைய பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வுகளை வழங்குங்கள் என்பதைத்தான் நாம் கேட்கின்றோம். நாங்கள் கேட்கும்பொழுது சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தித்தருவது இந்த அரச அதிபரின் கடமையாகும். எமக்குத்தெரியாது என்றல்ல. நாம் அரச திணைக்களங்களுக்கு நேரடியாக கடிதங்களை வழங்கி அவர்களை வரவழைத்துக்கொள்ள எங்களால் முடியும். ஆனால் அதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த முறையின் படி செய்யவேண்டும் என்பதையே நாம் விரும்பினோம். இந்த அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர அவர்கள் செயற்படும் முறை அருவருக்கத்தக்கது.

அரச அதிபர் என்பது இவர் ஒரு மாவட்டச்செயலர் என்பதாகும். ஒரு ஜனாதிபதியினுடைய நிகழ்வுகளை ஒழுங்குபடுத்திக்கொடுப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒருவர். குறிப்பாகச் சொல்லப்போனால் மக்கள் பிரதிநிதி என்று சொல்லுபவர் எவராகவிருந்தாலும் மதிப்பளிக்கப்படவேண்டியவர் என்பதேயாகும். இது லிங்கநாதனுடைய தனிப்பட்ட பிரச்சினையுமல்ல. இந்த மாகாணசபையின் உறுப்பினர்கள் தங்களது வீட்டுவேலையினைச் செய்பவர்களுமல்ல. இவர்கள் மக்களுக்காக சேவையாற்றுபவர்கள்.

உதாரணத்திற்கு வித்தியாவினுடைய பிரச்சினைகளை வைத்து ஏனைய சமுதாயத்தினருக்குமிடையிலும் இவ்வாறான பிரச்சினைகள் வளரக்கூடாது என்பதற்காக நாம் இங்கிருக்கக்கூடிய மாதர் அமைப்புக்கள், பெண் உத்தியோகத்தர்களை ஒழுங்குபடுத்தித்தருமாறு கேட்டபொழுது அதனை அவர் மறுத்திருந்தார். அதனை ஒழுங்குபடுத்தித்தர மறுத்த வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர இந்த மாவட்டத்திற்கு தேவையுமில்லை. அந்த ஆசனத்தில் அமர்வதற்கு அவர் தகுதியற்றவர். நிச்சயமாக எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் வவுனியா மாவட்ட அரச அதிபர் தொடர்பாக நேரடியாக கலந்துரையாடவிருக்கின்றேன். மத்திய அரசுக்கும், மாகாண சபையின் செயற்பாடுகளுக்கும்இவர்தடைக்கல்லாக செயற்படுகிறார் என்பதேயாகும். இவ்வாறானதொரு நிலைப்பாட்டை இல்லாமல் செய்யவேண்டும்.

06ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தேர்தல் காலத்தில் விடுதலைப்புலிகளின் பெயரை அரசாங்கம் உச்சரிப்பது தவறு

நீண்டகால போராட்ட வரலாற்றில் தமிழர் தாயகப் பிரதேசங்களான வடகிழக்கில் தேர்தல்களை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் பெயரை உச்சரிப்பதும், தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை எனக்கூறுவதும் அரசிற்குப் புதிய விடயம் அல்லாவிட்டாலும், ஆட்சிமாற்றத்தின் பின்னர் பாராளுமன்றத்தேர்தல் இடம்பெறவிருக்கின்றது. இந்நிலையில் மங்கள சமரவீர நாட்டைப் பிளவுபடுத்தப்போவதாகவும், விடுதலைப்புலிகளை சர்வதேச ரீதியாக வளர்த்தெடுக்கும் நோக்கில் இவரது செயற்பாடுகள் அமையப்பெற்றுள்ளதாகவும் ஜீ.எல். பீரிஸ் பாராளுமன்றில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் மங்கள சமரவீரவின் கருத்துக்கள் அமையப்பெற்றாலும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் ஒரு விடயத்தினைக் குறிப்பிட்டிருந்தார். அதாவது சர்வதேச ரீதியில் விடுதலைப்புலிகள் வளர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஜீ.எல்.பீரிஸ் கூறுவதைப்போன்று இதுவொரு புதிய விடயமும் அல்ல. விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என மீண்டும் தமிழ்ப்பிரதிநிதிகளைச் சித்தரித்து அரசாங்கம் அதில் குளிர்காய முயற்சிக்கிறது என்கிறார் சம்பந்தன்.

யுத்தம் நிறைவடைந்து 05 ஆண்டுகள் கடந்துவிட்டநிலையிலுங்கூட தமிழர்களது வாக்குப்பலம் இல்லாவிட்டால் அரசு வெற்றிபெற முடியாது என்ற நிலை இருக்கும்பொழுது, சிங்கள இனவாதிகளுடைய வாக்குகளைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் செயற்பட்டுவருகின்றனர். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளை உச்சரிப்பதில் தவறில்லை. தமிழ்மக்களின் தேசிய விடிவுக்காக சுயநலம் பாராது போர்க்களத்தில் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் விடுதலைப்புலிகள். அதேநேரம் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டோம் எனக்கூறும் சிங்கள அரசு அல்லது எதிர்க்கட்சியினர் பிரபாகரன், அவரது சகாக்கள் பற்றிப்பேசாமல் இருக்க இவர்களால் முடிவதுமில்லை.

நாளுக்குநாள் பிரச்சினைகளை எவ்வாறு தீவிரப்படுத்தலாம் என்கின்ற சிந்தனையிலேயே இவர்கள் வாழ்கின்றனர். குறிப்பாக பாராளுமன்றத் தேர்தலானது இவ்வருடம் இடம்பெறவிருப்பது உறுதிசெய்யப்பட்டு பாராளுமன்றமும் கலைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல்வாதிகள் தற்பொழுது வாக்குச்சேகரிக்கும் நோக்கில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கத் தம்மைத் தீவிரப்படுத்தியுள்ளனர். சர்வதேச நாடுகளின் உதவியுடன் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்படுகின்றது, பிரபாகரனை வைத்திருக்கின்றொம், மீண்டும் உயிர்பெற்று ஈழயுத்தம் நோக்கிப் புறப்படத் தயாராகிக்கொண்டிருக்கின்றார்கள் என்றெல்லாம் இச்சந்தர்ப்பத்தில் பொய்ப்பிரச்சாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவொரு சிறுபிள்ளைத்தனமான விடயமாகும். அதுமட்டுமல்லாது பாராளுமன்ற கதிரைகளை நிரப்புவதற்காகவும், தமது சுயநல அரசியலுக்காகவும் ஒரு சில அரசியல்வாதிகள் தமிழினத்திற்கு ஏதிராக மாறுபட்டக் கருத்துக்களை தெரிவித்துவருகின்றனர்.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இன்று வடக்குமாகாணசபையின் முதல்வராக இருக்கின்றார். இவரைக்கூட ஒரு பயங்கரவாதி என சித்தரிக்கின்றனர். இவ்வாறு கூறுவதிலிருந்து சிங்கள அரசிலிருக்கும் ஒருசிலரின் அறிவாற்றல் நன்கு புலப்படுகின்றது. குறிப்பாக தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்கள் தீர்வு ஒன்றினைப்பெற்றுக்கொள்வதில் விருப்பமில்லை. ஆகவேதான் உள்ளூர் விசாரணைகளே தேவை என்று வலியுறுத்துகின்றனர். அதனையே இந்த அரசும் முன்னெடுக்கின்றது. விடுதலைப்புலிகள் மீண்டும் உயிர் பெற்றுவிடுவார்கள் என அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதற்காகவே தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ்மக்களுக்கிடையில் பாகுபாடுகளையும், பிரிவினைகளையும் ஏற்படுத்த முனைகின்றனர். இடம்பெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல் மைத்திரி அரசிற்கு சவால்மிக்கதாக அமையும் எனலாம். விடுதலைப்புலிகள் அமைப்பினை பயங்கரவாதம் என சித்தரித்த அரசாங்கம் அதே வாயினால் அவர்களை மீண்டும் உச்சரிக்க ஆரம்பித்துள்ளது. இதற்கான காரணம் தேர்தல் ஒன்றினை மையப்படுத்தியே என்பதாகும்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

**52** எப்போதுமே இடைப் பட்டியலில் குண்டுகளைக் கொழுவும் பழக்கமுடைய கஜேந்தி இரண்டு குண்டுகளைக் கழற்றியெறிந்தார். படையினர் தாக்கியவாறே பின்னகர்ந்து மேலும் வலப்புறமாகப் போய் மாலதிக்கு அடுத்துள்ள நிலையை அடைந்த கஜேந்தி காவலரண் பகுதியாலேயே திரும்பி மாலதி யின் நிலையை வந்தடைந்து நிலமையை அவதானித்தனர். 70,71 இலும் அதன் பின்னாலுள்ள கிட்டத்தட்ட 100மீ. தூரம்வரையும் படையினர் நிற்கின்றனர். முதல் வேலையாகப் படையினரின் போக்குவரத்துப்பாதையை மூடவேண்டும். படையினரைநோக்கித் தாக்கியவாறே காவலரண் பாதையால் 70ஐ நோக்கி நகரத்தொடங்கினார் கஜேந்தி.

எறிகணைச் சூட்டாதரவுக்கு வழூத்திருத்தம் சொல்வதற்காகப் பதுங்கிச் சூட்டாளர்களான ராதிகாவையும், சிந்துவையும் கூட்டிக்கொண்டு படையினர் ஊடுருவிய நிலைகளுக்கு இடப்புற நிலையொன்றில் நின்ற மனோ விரைந்தார். அவர் கீர்த்தியை நெருங்க முன்பே பின்புறம் நின்ற படையினர் அடிக்கத்தொடங்கினர். படையினரின் சரமாரியான சூடுகளுக்கிடையில் ஒரே ஓட்டத்தில் வந்து கீர்த்தியின் காப்பரணுக்குள் பாய்ந்தனர். சிந்துவுக்கும், ராதிகாவுக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. காயப்பட்டு விழுந்த சிந்து இழுத்து இழுத்து வந்து சேர்வதற்கிடையில் படையினர் இடைவிடாது சுட்டுக்கொண்டேயிருந்தனர்.

படையினரால் வலப்புறம் மாலதியையும், இடப்புறம் கீர்த்தியையும் தாண்டி நகரமுடியவில்லை. கீர்த்தியின் காப்பரணின் பலம் அதிகரிப்பதை அவதானித்த படையினர் அந்தக் காப்பரணை அழிப்பதில் முனைந்தனர். பின்புறமாக ஒரு படைவீரர் குண்டுகளுடன் ஊர்ந்து பற்றை மறைவில் வந்துகொண்டிருந்ததைக் கண்ட கீர்த்தி, இந்த இலக்கைக் காட்டிச் சுடும்படி ஆதிரைக்குக் கட்டளையிட்டார். அந்தச் சூட்டோடு பின்புற நகர்வு கட்டுப்படுத்தப்பட்டது. புதிய போராளியான ஆதிரை சண்டைக்குள் நின்றே சண்டையைப் பழகிக்கொண்டிருந்தார்.

இதற்கிடையில் சபேசன் தலைமையில் புலனாய்வுத்துறைத் தாக்குதல் அணியொன்றை மைதிலி எமக்கு உதவிக்கு அனுப்பிவிட்டிருந்தார். அவர்கள் வேகமாக ஓடிவந்து கீர்த்தியின் காப்பரணுக்குள் குதித்தார்கள். அவர்களுக்கு நிலைமையை விளக்கிய கீர்த்தி அவர்கள் அடித்துப்பிடிக்கவேண்டிய திசையைக் காட்டினார். இறங்கி அடிப்பதற்காகக் காப்பரணுக்கு வெளியே முதலில் சபேசன் ஏறினார். இரண்டாவது ஆள் ஏறிக்கொண்டிருக்கும்போது படைத்தரப்புப் பதுங்கிச் சூட்டாளரின் சூடு சபேசனின் நெஞ்சில் பாய, சரிந்து விழுந்த சபேசனை உள்ளே இழுத்தெடுத்துக் கட்டுப்போட்டார்கள். ஆனால் அவரின் உயிர் பிரிந்துவிட்டது.

முன்புறம் நின்ற படையினர் தம்மை இடது பக்கமாகத் தாக்குவதற்காக நகர்ந்துகொண்டிருப்பதை அவதானித்த எம்மவர்கள், அதிகாலையில் வந்த அவசரத்திலும்கூட, முன்புறம் எங்கெங்கே கிளைமோர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கீர்த்தி கேட்டுவைத்திருந்தார். காப்பரணிலிருந்து 50மீ. தூரத்திலுள்ள மரத்தில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோரின் வீச்செல்லைக்குள் படையினர் நகரும்வரை காத்திருந்தவர்கள், அவர்கள் அந்த மரத்தை நெருங்கியதும் கிளைமோரை வெடிக்கவைத்தார்கள்.

அதுவரை நேரமும் இந்தக் காப்பரணின் பின்வாசலில் ஒரு வெற்றுக் கொள்கலன் இருந்து வாயிலை மறைத்துக்கொண்டிருந்ததால் சுட முடியாதிருந்த பதுங்கிச் சூட்டாளன், எம்மவர்கள் வெளியே தலைகாட்டினால் எல்லோரையும் சுடப்போகும் சிக்கலை உடனடியாக நீக்கியே ஆகவேண்டும். நந்தா நின்ற திறந்த காப்பரணுக்கும் தமக்குமிடையே இருந்த மரத்தடியைநோக்கிப் பக்கவாட்டுச் சூட்டுத் துவாரங்களுடேயும் முன்பக்கத்திலும் பொழிந்து தள்ளினார்கள். அந்த அடியோடு பதுங்கிச் சூடு நின்றுவிட்டது.



வந்திருந்த புலனாய்வுத்துறை அணியைக்கூட்டிப்போய் இடங்களைப்பிடிக்குமாறு மனோவை மைதிலி பணித்தார். தனக்குத்தேவையான எறிகணைச் சூட்டாதரவைக் கேட்டுப்பெற்றவாறே நகரமுற்பட்டார் மனோ. ஆனால் படையினரின் எதிர்ப்போ சொல்லும் தரமற்றதாயிருந்தது. ஒரு அடிதானும் நகரமுடியாதவாறு பின்னால் சூடுகளைப் படையினர் வழங்கிக்கொண்டிருந்தனர். அமெரிக்காவில் தனது படையியல் மேற்படிப்பை முடித்துக்கொண்டு அப்போதுதான் நாடு திரும்பியிருந்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா போட்ட திட்டம் எமது முன்னரங்கைக் கடந்து 100மீ.இக்கு மேல் போகமுடியாமல் திணறிக்கொண்டிருந்தது.

படைநகர்வுப்பாதையின் வலப்புறம் வந்துசேர்ந்திருந்த கஜேந்தி காவலரண் பகுதியாலேயே தாக்கியபடி லெப். வஞ்சிமயில், கப்டன் மனைமதியின் PK LMG அடியுடன் நகரத்தொடங்கினார். பைந்தமிழின் LMG பொழிந்தபடி முன்னே போய்க்கொண்டிருந்தது. திடீரென அதற்கு இயங்குநிலைத் தடையேற்பட, வஞ்சிமயிலின் PK LMG முன்னகர்ந்தது. கஜேந்தியின் நகர்வுக்கு ஏற்ப எறிகணைச் சூட்டாதரவை மாலதி ஒருங்கிணைத்துக்கொடுத்துக் கொண்டிருந்தார். எமது காப்பரண்களை ஊடறுத்துப்போன நீரோடியுலர்ந்த அருவியின் மண்பிட்டிக்கு அப்புறம் நின்ற படையினரின் அடியில் கஜேந்தி வீரச்சாவடைய வஞ்சிமயில் காயமடைய, எஞ்சி நின்ற மதியரசி எல்லோரையும் இழுத்துக்கொண்டு திரும்பிவந்தார்.

நகர முயற்சிசெய்து கொண்டிருந்த மனோவுடன் அருள்நங்கையின் செக்சன் வந்துசேர்ந்துகொள்ள, மாலா, கீர்த்தி, ஆதிரையும் இணைந்து தாக்கியபடி முன்னேறினர். எறிகணைகளுக்கு இலக்குச் சொன்னபடி முன்னே நகர்ந்துகொண்டிருந்த மனோவைப் படையினரின் LMG அடி விழுத்தியது. ஏனையவர்களைக் கீர்த்தி ஒழுங்குபடுத்தி மறுபடியும் முன்னேறுவதற்குத் தயாராகினார்.

நிலைமையைப்புரிந்துகொண்ட மைதிலி, தன்னுடன் நின்ற தமிழ்முரசுவின் PK LMG கீர்த்தியின் இடத்துக்கு அனுப்பினார். அச்சுதா, இசைநிலாவைக் கூட்டிப்போன தமிழ்முரசு படையினரைநோக்கித் தனது அடியைத் தொடக்கினார். தனது கட்டளைப் பணியகத்தில் நின்ற மைதிலி, விதுஷாவிடமும், கேணல் தீபனிடமும் தன்னைச் சண்டை நடக்குமிடத்துக்குப் போகவிடுமாறு பலதடவை கேட்டுக்கொண்டிருந்தார். இவரைக் கட்டளைகள் கொடுக்கும்படியும், சண்டையை கஜேந்தி செய்வார் என்றுமே பதிலளித்துக்கொண்டிருந்த கட்டளையதிகாரிகள் இருவருமே சண்டையின் போக்கைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

சன்னார்க்குளப் பக்கம் சண்டை முடிந்தபின்னும், இங்கே அது தொடர்ந்துகொண்டிருப்பதால் மைதிலியை நேரடியாகச் சண்டையை நடத்தும்படி கேணல் தீபன் பணித்தார். தயார்நிலையில் கட்டளைப் பீடத்தில் நின்ற சுதனியின் அணியையும் கூட்டிப்போகும்படி விதுஷா கட்டளையிட்டார். அவர்களையும் யாழிசையின் RPG களையும் அழைத்துக்கொண்டு, கீர்த்தி நிற்குமிடத்துக்கு விரைந்தார் மைதிலி.

கீர்த்தி, மைதிலியின் நேரடி வழிநடத்தலில் எமது படையணி மிகக்கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் மிகமிகக் கடுமையாகத் தாக்கியபடி முன்னேற, சிறப்புத் தளபதி விதுஷா எங்களுக்கான ஆதரவுச் சூடுகளை ஒருங்கிணைத்துக்கொடுத்துக்கொண்டிருக்க, எம்மவர்களின் அடியின் வீச்சுத்தாங்காமல் படையினர் சுடுகலன்களைக் கூடக் கைவிட்டுத் தமது பகுதியைநோக்கிப் பின்னகர, எமது படையணி இழக்கப்பட்ட பகுதிகளை மீளக்கைப்பற்றிச் சண்டையை மாலையில் முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், இராணுவம் போர்முழக்கம் நடவடிக்கையை முழுமையாகக் கைவிட வழிகோலியது. காயமடைந்த படையினரை நீரோடியலர்ந்த அருவியால் இழுத்துச் சென்றவர்கள் எங்களது சூழ்ச்சிப்பொறிகளிலே தமது கால்களையும், உயிர்களையும் இழந்தவாறு படுதோல்வியுடன் பின்னகர்ந்த வழிகளெங்கும் படையினரின் கால்கள், காலணிகள் சிதறிப்பறந்து மரங்களில் கொழுவிக்கிடந்த உடைகள், உடலின் பாகங்கள், இரத்தம் இரத்தம்... அவலத்தைத் தந்தவர்களுக்கே அதைத் திருப்பிக்கொடு என்றார் எங்கள் தலைவர்.

தொடர்வான்...


### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்




| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 329. | 2ம்.லெப்.வாணி/ரூபி சரஸ்வதி | பழனிச்சாமி | கிளிநொச்சி | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 330. | 2ம்.லெப்.தமிழ்வாணி | நாகேஸ்வரி சின்னத்தம்பி | வன்னி | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 331. | 2ம்.லெப்.பூமலர் | புவனேஸ்வரி சுப்பிரமணியம் | கிளிநொச்சி | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 332. | 2ம்.லெப்.சீர்விழி | மகேஸ்வரி வேலு | மன்னார் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 333. | 2ம்.லெப்.சோழக்குயில் | குமுதினி குமாரலிங்கம் | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 334. | 2ம்.லெப்.பூங்கோதை/ கபிலா | அகிலாண்டேஸ்வரி மார்க்கண்டு | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 335. | 2ம்.லெப்.கலைப்பாவை | பரமேஸ்வரி முத்துச்சாமி | கிளிநொச்சி | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |

சிறுவனாக இருந்தபோது அமைதியான சுபாவத்தையும், ஒதுங்கியிருக்கும் இயல்பையும் தன்னகத்தே கொண்ட பிரபாகரன் அவர்கள் பதினெட்டு வயதிலேயே தமிழ் ஈழத்துக்கான ஆயுதப்போராட்டத்தின் அவசியத்தையும் அப்போராட்டத்துக்கான கட்டமைப்புக்களையும் தன்னகத்தே வளர்த்துக்கொண்டமை உலகையே வியக்கவைத்தவொன்று.

பிரபாகரனின் தாயார் ஒருவரின் சிநேகிதி 1958இன் இனக் கலவரத்தின்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார். எரிகாயங்களுக்குள்ளான அவ்வம்மையார் பிரபாகரனுடைய வீட்டிற்று வந்து தான் இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு எரிகாயங்களுக்கு உட்பட்டது உள்ளடங்கலான அவஸ்தைகளையும் தமிழ்ப்பெண்களும், ஆண்களும் தினருக்கு எதிராகப் போராளிகள் என்னும் கட்டமைப்பினையும், கடற்படையினருக்கு எதிராகக் கடற்புலிகள் என்னும் அமைப்பையும், ஆகாயப் படைக்கு எதிராக வான்புலிகள் என்னும் அமைப்பையும் உருவாக்கியதோடு அடக்கப்படுவோரின் விடுதலைக்கான போராட்டம் என்பதைக் கருத்திற்கொண்டு இலங்கை இராணுவம் தொடர்பில் கடற்புலிகள் என்னும் அமைப்பையும் தோற்றுவித்தார். அவருடைய உருவாக்கமான இக்கட்டமைப்பு மிகவும் சாணக்கியம் மிக்க ஒன்றாகவே கருதப்படவேண்டும்.

இவ்வாறாகத் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் தலைவர் பிரபாகரன் யாழ்ப்பாணத்தின் பல ஊர்களுக்கும் கால்நடையாகவே சென்று இளைஞர்களைச் சந்தித்துத் தமிழ் ஈழம் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவரும், பருத்தித்துறை தேர்தல் தொகுதியில்கம்யூனிஸ்றகட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவருமான பொன்.கந்தையா, மானிப்பாயைச்சேர்ந்த நா.சண்முகதாசன், வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் கம்யூனிஸ்ற் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வைத்திலிங்கம், ஆனந்தசங்கரி, உடுப்பிட்டித் தர்மரத்தினம், விஷ்வநாதன், துன்னாலையைச் சேர்ந்த சட்டத்தரணி தர்மகுலசிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் உயர் மத்திய தர வகுப்பினராகவிருந்தபோதுங்கூட கம்யூனிஸ்ற் கட்சி, சமசமாஜக் கட்சி என்பவற்றில் ஈடுபாடுகொண்டு அவற்றில் இணைந்து வேலை செய்தமையால் இவர்கள் மீது யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேட்டுக்குடியினருக்கும், தீண்டாமையைப் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்னும் காங்கேசன்துறையில் போட்டியிட்டார். அப்போது வ.பொ அவர்கள் சார்ந்திருந்த சோவியத் கம்யூனிஸ்ற் கட்சியும் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்தது. இத்தேர்தலில் போட்டியிட்டமை கம்யூனிஸ்ற் என்னும் நிலையில் வ.பொ. அவர்களால் இழைக்கப்பட்ட பெருந் தவறாகும். மேலும் இவ்வரசில் அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ற் கட்சியைச் சேர்ந்த பி.வை.துடாவை அவர்கள் பதில் கல்வி அமைச்சராக இருந்தபோது வடக்குக் கல்வி வளத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டிருந்தபோதும் வ.பொ. அவர்கள் வாளாவிருந்தார். ஆனால் பின்னாளில் இத்தவறுகளுக்காக அவர் மனம்வருந்தி வடக்கின் இளையோரது உணர்வுக்கு மதிப்பளித்துச் செந்தமிழர் இயக்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வமைப்பானது வடக்கில் பெருமளவில் தாக்கத்தையேற்படுத்த முடியாமல்



# ஆயுதக் குழுக்களின் பலமும், பலவீனமும்

கலகக்காரரினால் எதிர்கொண்ட இன்னல்களையும் விலாவாரியாக எடுத்தியம்பும்போது சிறுவன் பிரபாகரன் அருகிலிருந்துகொண்டுமிக அவதானமாக அவ்வம்மையார் கூறியவற்றையெல்லாம் கேட்டுவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

அவருடைய தாயாருடைய சிநேகிதி கூறிய விடயங்கள்தான் பிரபாகரனுடைய பிஞ்சு உள்ளத்தில் சிங்கள இனத்தோடுதமிழ்மக்கள்சேர்ந்துவாழ்வது அசாத்தியமானவொன்றென்னும் உறுதிப் பாட்டைத் தோற்றுவித்தது.

இவ்வாறான மனோபாவத்தோடு பிரபாகரன் வளர்ந்து வந்ததனால்தான் தனது 18வது வயதளவில் தமிழ் மக்கள் தமது உரிமைகளை அடக்கு முறையாளர்களிடமிருந்து கேட்டுப்பெற முடியாதென்றும் அவர்களைத் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றித் தனிநாடு அமைப்பதன் மூலமே தமிழ் மக்கள் சுயமரியாதையுடனும், தன்மானத்துடனும் வாழமுடியுமென்றும் உறுதிபட முடிவெடுத்தார். அவருடைய இம்முடிவுக்குத் தமிழகக் கட்சிகள் குறிப்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சியும், அதன் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும் முன்னெடுத்த போராட்டங்கள் படுதோல்வியில் முடிந்தமையும், தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டமையும் பெரிதும் வலுச்சேர்த்தன. பிரபாகரன் இவ்வாறான ஒரு மனோபாவத்தோடு இருந்தபோதுதான் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்குக் காரணகர்த்தாவாகக் கருதப்பட்டவரான அன்று யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமையும், அதன் தொடர்ச்சியாக வடபகுதி இளைஞர்கள் ஆயுதமேந்திப்போராடத் தீர்மானித்தமையும் அதற்குத் தலைமை தாங்க முன்வந்த பிரபாகரன் அவர்கள் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் என்னும் இயக்கத்தை ஆரம்பித்து அடக்கியாள்வோரின் கட்டமைப்புக்களான இராணுவம், கடற்படை, வான்படை என்பவற்றுக்கெதிராக முறையே போராளிகள், வான்புலிகள், கரும்புலிகள், கடற்புலிகள், கடற்கரும்புலிகள் என்னும் அமைப்புக்களை உருவாக்கி வியத்தகு ஆயுதக் கட்டுமானத்தையும் . தோற்றுவித்தார். அடக்குமுறையாளர்களின் இராணுவத் இளைஞர்களின் மத்தியில் வலியுறுத்தி வந்தார். ஆரம்பத்தில் அவரிடம் ஊர் ஊராக அலைந்து திரிந்து இளைஞர்களைச் சேர்ப்பதற்கு பணப்பற்றாக்குறை நிலவியதால் அவருடைய வீட்டில் இருந்த பசுமாட்டைக் களவாகத் திருடிச்சென்று விற்றுப் பணம் தேடி தனக்குத்தேவையான ஆரம்பச்செலவுகளை மேற்கொண்டிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாகத் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தமிழ் ஈழம் என்னும் தனிநாட்டை அமைக்கும் நோக்கில் உருவாக்கிய ஆயுதக்கட்டமைப்பு வியத்தகு ஆற்றல் கொண்டதாக விளங்கியது. தொடர்ந்து இடம்பெற்ற பல்வேறு அரசியல் பின்னணிகளைக் கொண்ட காரணிகளாலும், தனிநபர் குரோதங்களினாலும், கோஷ்டி முரண்பாடுகளினாலும் இவ்வமைப்போடு வேறுஞ்சில ஆயுதக்குழுக்களும் தமிழ் மக்களுக்குள் உருவாக்கப்பட்டன.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆரம்பகாலந்தொட்டு வலதுசாரி, இடதுசாரி அரசியல் முரண்பாடு மிகவும் கூர்மையடைந்த நிலையிலேயே காணப்பட்டது. ஏழை விவசாயிகளையும், தொழிலாளர்களையும் பெருமளவில் கொண்டிருந்த வன்னிப் பிராந்தியத்திலும், கிழக்கிலங்கையிலும் இவ்வரசியல் முரண்பாடு மிகவும் குறைந்தளவு வீச்சோடு .காணப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி வளந்தான் அங்கு இடதுசாரிகளையும், இடதுசாரி அரசியல் கட்சிகளையும் குறிப்பிடத்தக்களவு வலுவுடன்வேரூன்றச்செய்தன. அத்தோடு குடாநாட்டில் பெருஞ்சாபக்கேடாக விளங்கிய தீண்டாமை அங்குள்ள கல்வி வளத்தின் காரணமாகஉருவான இடதுசாரி அரசியல் வீச்சுக்கு உறுதுணையாக நின்று அவ்வீச்சானது குடாநாட்டில் குறிப்பிடத்தக்களவுக்கு வேரூன்றியது. இவ்வீச்சுத்தான் பின்னாளில் கம்யூனிசம் சார்ந்த நெறியும் அதற்கு எதிரான ஆயுதப்போராட்டத்தின் மீதான அரசியல் அழுத்தமும் வடபகுதி ஆயுதப்போராட்டக் கட்டமைப்புக்குள் சிக்கல்வாய்ந்த தோற்றப்பாட்டை வெளிக்கொணர்ந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆயுதப்போராட்டத்தின் முன்னரான காலப்பகுதியில் கல்விசார்ந்த உயர் மத்திய தர குடும்பங்களைச் சேர்ந்த பலர் ஆரம்பத்தில் இடதுசாரிகளாக இருந்தார்கள். அவர்களில் இலண்டன் உணர்வுள்ளவர்களுக்கும்மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. இவ்வெறுப்பின் காரணமாக அவர்கள் தேர்தல்களின்போது இவர்களை நிராகரித்ததோடு சாதாரண அன்றாட அரசியல் நகர்வுகளிலும் இவர்களைப் புறக்கணித்தார்கள். இவர்களுக்குள் பொன்.கந்தையா என்னும் கம்யூனிஸ்ற் பிரமுகர் ஒருவர் மட்டுந்தான் பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியில் வெற்றியீட்டினார். வட்டுக்கோட்டைத் தொகுதியில் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சியின் (சோவியத் சார்பு) சார்பில் அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராகப் போட்டியிட்ட வைத்திலிங்கம் அவர்களும், காங்கேசன்துறையில் அதேகட்சியின் சார்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட வ.பொன்னம்பலம் அவர்களும், கிளிநொச்சியில் லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட வி.ஆனந்தசங்கரி அவர்களும், உடுப்பிட்டியில் அதே கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஆர்.ஆர்.தர்மரத்தினம் அவர்களும் தொடர்ந்து தோல்விகளையே தழுவிக்கொண்டார்கள். வி.ஆனந்தசங்கரி அவர்கள் லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து விலகி அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசில் இணைந்து அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானார்.

காங்கேசன்துறையில் செல்வநாயகம் அவர்களுக்கு எதிராகப் போட்டியிட்ட சோவியத் கம்யூனிஸ்டான வ.பொன்னம்பலம் அவர்களும், இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி (சீன சார்பு) பொதுச் செயலாளர் நா.சண்முகதாசன் அவர்களும் வடபகுதித் தமிழர் குறியீடுகளைக்கொண்ட கட்சிகளுக்குக் கொள்கையளவில் பெருஞ்சவாலாக விளங்கினார்கள். இவர்களின் வடபகுதி அரசியல் ஆளுகையானது தமிழ் ஈழத்துக்காக ஆயுதம் ஏந்திப்போராட வேண்டுமென்னும் மிகு எழுச்சிக்காளாகிய வட பிரதேச வாலிபர்களையும் ஆள்கொள்ளத்தான் செய்தது. வ.பொன்னம்பலம் அவர்களின் வடபகுதி அரசியல் ஆளுகையானது மிதமான நிலையிலும், சண்முகதாசன் அவர்களின் அரசியல் ஆளுகையானது தீவிரமான நிலையிலும் அப்பிரதேச ஆயுதந்தரித்து விடியலுக்காக போராட விழைந்து நின்ற இளையோரையும் ஆட்கொள்ளவே செய்தது. இவர்களில் வ.பொ அவர்கள் 1970இல் ஆட்சிபீடமேறிய ஐக்கிய முன்னணி அரசு 1972இல் நிறைவேற்றிய குடியரசு அரசியல் யாப்புக்கு சார்பாக செல்வநாயகம் அவர்களை எதிர்த்துக் போனமைக்கு அவரால் இழைக்கப்பட்ட மேற்றரப்பட்ட இரு தவறுகளே காரணமாக அமைந்திருந்தன.

எனினும் அவருடைய இந்நடவடிக்கை இளைஞர்களில் ஒரு சாராருக்குஅவர்மீதுஓரளவுமரியாதையையும், அனுதாபத்தையும் உருவாக்கியது. பின்னாளில் ஆயுதக்கட்டமைப்புக்குள் உருவான பிளவும், அதன் விளைவாக குழுக்கள் உருவாக்கப்பட்டமைக்கும் இவ்விடதுசாரி நபர்களது வடபகுதி அரசியல் அழுத்தம் குறிப்பாக வ.பொன்னம்பலம், சன்முகதாசன் ஆகியோரது அப்பகுதிக்கான ஆளுகை என்பன பிரதான காரணிகளாக விளங்கின.

இதன் விளைவால் உருவான ஆயுதக்குழுக்கள் சமூக விவகாரங்கள் தொடர்பில் பலம் வாய்ந்தவையாக இருந்தபோதும், தமிழ்த்தேசியம் தொடர்பில் பலம் குன்றியதாகவே விளங்கின. மேலும் விளக்கமாகக் கூறின் சோசலிசம் தொடர்பில், கம்யூனிஷம் தொடர்பில் வன்னிப் பிரதேச மக்கள் தொடர்பில், கிழக்கிலங்கை மக்கள் தொடர்பில், மலையகத் தமிழ் மக்கள் தொடர்பில் ஆயுதக்குழுக்கள் பலம் வாய்ந்தவையாக விளங்கியபோதுங்கூட தமிழ்ப்பிரதேசங்களைச் சேர்ந்த மேட்டுக்குடியினரது நலன்சார்ந்த தமிழ்த்தேசியத்தின் பாற்பட்டு மிகவும் பலவீனமான நிலையிலேயே காணப்பட்டன. மேலும் சோசலிஷம், கம்யூனிஸ்ற் ஆட்சியதிகாரத்தில் அவாமிக்கவர்களான வறுமைக்கோட்டிலும், வறுமைக்கோட்டின் கீழும் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் இக்குழுக்களின் இவ்வரசியல் சுபாவத்தினால் கவரப்பட்டு அவர்களோடு இணைந்தமையும், அவர்கள் வடக்கு-கிழக்கில் வலுப்பெற்றுத் தக்கவைக்கப்பட்டமையும் ஆயுதக்குழுக்களுக்குப் பலத்தைக் கொடுத்தாலுங்கூட, வடக்கு கிழக்கு வெகுஜன கட்சியின் அபிமானத்தின் பாற்பட்டும், மலையகத் தமிழ் மக்களின் பார்வையின் பாற்பட்டும், இஸ்லாமிய மக்களின் பார்வையின் பாற்பட்டும் பலங்குன்றியவையாகவே காணப்பட்டன. இப்பலங்குன்றிய நிலைமையை ஈடுசெய்வதற்காக அவர்கள் அரச தரப்பினரின் அனுசரணையை எதிர்பார்த்தமை இயல்பின் பாற்பட்டது.

12ஆம் பக்கம் பார்க்க...

வீரப்பதி விநோதன்

# தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாரின் இராஜதந்திர நகர்வுகள்




ஆயுதப்போராட்டம் முறியடிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை தமிழரின் பிரதிநிதித்துவ அமைப்பினரான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் தமிழ் மக்களின் சுயநிர்ணயம், சுயாட்சி தொடர்பில் சர்வதேசியளவில் மேற்கொண்டுவரும் இராஜதந்திர நடவடிக்கைகள் ஆய்வுசெய்யப்படுவது, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாருக்கும், தமிழ் மக்களுக்கும் இன்றைய நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகளில் நெறிபிறழாத தொடர்ச்சியான நகர்வுகளுக்கான வழிகளைக் காட்டுவதற்கு உறுதுணையாகவிருக்கும்.

முதலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள், யுத்தம் முறியடிக்கப்பட்டு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் யுத்தக்குற்றவாளியாக உலகளாவியளவில் நிறுத்தப்பட்டு, அவ்வகிலந் தழுவிய அழுத்தம் ஜனாதிபதி மஹிந்த அவர்களை கட்டிப்போட்டு அவர் திருதிரு என விழித்துநின்றபோது அவருடைய அவ்விக்கட்டான நிலையைக் கச்சிதமாகப் பயன்படுத்தி உலக நாடுகளுக்கும் சென்று அந்நாடுகள் இலங்கை இனப்பிரச்சினையை யுத்தம் முடிந்தபின் சூட்டோடு சூடாக அக்கறையோடு உள்ளீர்த்து மஹிந்த அவர்களை உடனடியாக இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு நெருக்குவாரத்தை உருவாக்குவதற்கு வழிவகுத்தமை மிகவும் பாராட்டப்பட வேண்டியவொன்று.

அமெரிக்க தேசமானது விடுதலைப்புலிகள் அமைப்பை உலகளாவியளவிலுள்ள பயங்கரவாத அமைப்புக்களிலொன்றென முத்திரை குத்தியதோடு, மஹிந்த அரசின் யுத்த முறியடிப்புக்குத் துணைநின்ற போதுங்கூட அந்நாடானது யுத்தம் முறியடிக்கப்பட்டபின் மீண்டும் யுத்தமொன்று உருவாகாதவாறு இலங்கை இனப்பிரச்சினையை உடன் தீர்த்துவைக்குமாறு இலங்கை அரசை நெருக்கிநின்றது. இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வின்பால் அமெரிக்க அரசு விசுவாசத்தோடு தனது பார்வையைச் செலுத்தாதபோதுங்கூட அப்பிரச்சினையின் தீர்வற்ற நிலையில் மீண்டும் ஆயுதப்போராட்டமொன்று வெடிப்பது தமது உலக நலனைப்பாதிக்குமென்ற காரணத்தினாலேயே அமெரிக்காவானது இலங்கை இனப்பிரச்சினையை உடன் தீர்த்துவைக்குமாறு மஹிந்த அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்தது. இவ்வாறே மேற்குலக வல்லரசுகளும், இந்திய மேலாதிக்க அரசும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த அவர்களை உடன் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு வலியுறுத்தியது. இலங்கை இனப்பிரச்சினையானது உடன் தீர்த்துவைக்கப்படாமல் தொடர்ந்து இழுபறிப்பட்டுச் செல்லுமாகவிருந்தால் மீண்டும் அந்நாட்டில் இனவாத யுத்தம் ஒன்று உருவாகுமென்றும் அப்படியொரு ஆயுதப்போராட்டம் தமிழர் தரப்பில் மீண்டும் கட்டவிழ்த்துவிடப்படும்போது தத்தமது சர்வதேசியளவிலான நலன்கள் பாதிக்கப்படுமென்றும் கருதிய நிலையானது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்களின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்குப் பெரிதும் துணைநின்றதெனவே கூறவேண்டும்.

அமெரிக்கா, ஐரோப்பிய முகாம், இந்திய மேலாதிக்க அரசு ஆகியன இலங்கைத்தமிழ் மக்களின் பிரச்சினைகள் உடன் தீர்த்துவைக்கப்படவேண்டுமென விசுவாசத்தோடு விளம்பாவிட்டாலுங்கூட அவற்றின் இவ்வேண்டுதலும், இலங்கை அரசின் மீதான அழுத்தமும் அவற்றின் நலன்களின் பாற்பட்டவையென்பதை வெளிக்காட்டாமல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய முகாமுக்கும், இந்தியாவுக்கும் விஜயஞ்செய்து இலங்கைத்தமிழ் மக்களின் உண்மை நிலையையும் அவர்களுடைய அன்றாடச் சீவனோபாய நகர்விலுள்ள இடர்ப்பாடுகளையும், இன்னல்களையும் எடுத்துக்கூறித் தமிழ் மக்கள் தொடர்பில் இந்நாடுகள் மஹிந்த அவர்கள் மீது பிரயோகித்த அழுத்தத்தை இராஜதந்திர மனோபாவத்தோடு அணுகிப் பல தடவைகள் அத்தேசங்களுக்குச் சென்று தமிழர் அவலத்தை முறையிட்டமை கருத்தளவிலும், உலக நெருக்குதலின் பாற்பட்டும் மஹிந்த அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலான தீர்வின்மை நீடித்துச் சென்றமையையிட்டு அச்சமடைந்தும் ஆலோசனையில் ஈடுபடவைத்தமை தொடர்பிலும் பயனளிக்காமல் விடவில்லை.

அவர்கள் இவ்விடயத்தைச் சம்பந்தன் மேற்கொண்ட சர்வதேசியளவிலான அரசியல் பயணங்கள் இலங்கையில் நீண்டகாலமாக இழுபறிப்பட்டுவருவதும் பெருஞ்சாபக்கேடாக விளங்குவதுமான தேசிய சிறுபான்மை இனத்தின் பிரச்சினை தொடர்பிலான தீர்வு தொடர்பில் இராஜதந்திரம் மிக்க தாக்கங்களைப் பிரயோகித்தபோதுங்கூட தீர்வு தொடர்பில் எதிர்பார்த்த வெற்றியையளிக்கவில்லை. ஏனெனில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், மேற்குலகத்தினதும், அந்நிய வல்லாதிக்கத்தினதும் அழுத்தத்தின் பால் மஹிந்த கொண்ட அச்சம் தீவிலுள்ள சிங்கள-பௌத்த கடும்போக்காளர்கள் மீது அவர் கொண்ட அச்சத்தின் வீச்சைவிட மிகக்குறைந்த வீச்சினையே கொண்டுள்ளது.

இதனால்தான் சம்பந்தன் அவர்களுடைய இராஜதந்திரம் மிக்க காய்நகர்த்தல்கள் அரசியல் ஆய்வுக்குட்பட்ட நிலையில் கருத்துக்கெடுக்கத்தக்கனவாகவும் கனம் பண்ணக்கூடியவையாகவும் விளங்கினவே தவிர நடைமுறையில் இலங்கை அரசானது அவற்றின் பின்விளைவுகளைப் பரிசீலித்து இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் முன்நோக்கைக்கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அரசினருக்குச் சம்பந்தன் அவர்களுடைய சர்வதேசியளவிலான இராஜதந்திரம் மிக்க செயற்பாடுகளினால் அமெரிக்காவும், மேற்குலகும், இந்திய மேலாதிக்கமும் பிரயோகிக்கும் அழுத்தம் வெறும் உத்தியோகபூர்வமானதேயொழிய கொள்கையளவிலான ஒன்றல்ல எனவும் நன்கு தெரியும். இதனால் அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்துவைத்து மேற்றரப்பட்ட மூன்று முகாம்களினதும் உத்தியோகபூர்வமான அபிலாசைகளைத் தீர்த்துவைக்கமுன்வரவில்லை. இவ்விடத்தில் இம்முகாம்கள் தம்மீது பிரயோகிக்கும் அழுத்தம், நிஜமாகவே இலங்கைத் தமிழ்மக்களின் மீதுகொண்ட பற்றுப் பாசத்தினால் அல்ல. அவர்களுடைய அடிமைத்தளை அறுக்கப்பட வேண்டுமென்ற உண்மையான அவாவினால் அல்ல. மாறாகத் தம்முடைய நலன்தொடர்பில் யுத்தம் மீண்டும் ஆரம்பமாதல் என்னும் விடயம் மிகவும் பாதகமான நிலையைத் தோற்றுவிக்கும் என்னும் உணர்வு மட்டுமே என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட மஹிந்த அவர்கள் இம்முகாம்கள் தம்மீது பிரயோகிக்கும் அழுத்தங்கள் அழுத்தங்களாகவே இருந்துவிட்டுப் போகட்டும் என்னும் மனோபாவத்தோடு சிங்கள - பௌத்த கடும்போக்காளர்களின் அழுத்தங்களுக்குப் பயந்து அவர்கள் மூலமான வாக்குவேட்டையின் வெற்றியை எதிர்நோக்கி இலங்கைத் தமிழர் பிரச்சினையைத்தீர்த்து வைக்காமலேயே இழுத்தடித்துக்கொண்டே வந்தார்.

இந்நிலையில் தேர்தலும் வந்து ஆட்சி மாற்றமும் உருவாகி மைத்திரி அவர்களின் கரங்களுக்குள் ஆட்சி மாற்றமும் சென்றடைந்துள்ளது. இதன்பின் சுலபமாக மேற்குலக, இந்திய வல்லாதிக்க முகாம் முன்னரைவிடப் பலங்குன்றிய நிலையிலேயே இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் குரலெழுப்புகின்றன. அதாவது இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்னும் இம்முகாம்களின் குரல் உச்சஸ்தாயியில் இருந்து படிப்படியாகக் கீழிறங்கி மைத்திரியின் ஆட்சியில் நுணுக்கமாக வெளிக்கொணரப்படுகின்றது.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட மூன்று தரப்பாரினதும் இலங்கைத்தமிழ் மக்களின் தீர்வு தொடர்பான அழுத்தம் மஹிந்த அரசில் இருந்ததுபோல் மைத்திரி அரசில் அவ்வளவு பெரிதாகவில்லை. இதனால் இவ்விடயந்தொடர்பிலான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாரின் இராஜதந்திரக் காய்நகர்த்தல்களும் பின்னடைவையே எய்தியுள்ளன. அதற்குப் பதிலாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவருமான மாவை சேனாதிராஜா அவர்கள் மைத்திரிக்கு வாக்களிக்கும்படி தாம் தமிழ் மக்களிடம் கோர, அவர்களும் தமது கோரிக்கைகளை ஏற்று வாக்களித்தமையால் மைத்திரி நன்றிக்கடனாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகைளத் தீர்த்துவைப்பாரெனக் கூறித் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தினார். நன்றிக் கடனாக என்ன எக்கடனாகவுங்கூட மைத்திரி தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்த்துவைக்கப்போவதில்லை.

மேலும் தமிழரசுக்கட்சியின் தலைவரும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிலொருவருமான சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகிக்கும் ஆசை மேலீட்டினால் மைத்திரி அரசானது இன்னும் பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பதவியில் இருக்குமாயின் நிச்சயமாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்குமெனவும் அண்மையில் நம்பிக்கை வெளியிட்டார். ஆனால் 10வருடம் என்ன 100 வருடம் தொடர்ந்து எந்தவொரு சிங்கள பௌத்த கடும்போக்குக்குக் கட்டுப்பட்டு ஆட்சிசெய்யும் அரசாங்கமும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்காது என்பதும், தீர்த்துவைக்க முடியாது என்பதுமே நிதர்சனமாகும்.

ஆனால் விரைவில் இடம்பெறவிருக்கும் பொதுத்தேர்தலில் மைத்திரி மீண்டும் ஆட்சிக்கு வருவதென்பது பெரும்பாலும் அசாத்தியமானதொன்றாகவேயிருக்கும். எனவே மஹிந்த மறுபடியும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பால் தமது இராஜதந்திர நடவடிக்கையைப் புதுப்பிப்பதும் இயல்பின் பாற்பட்ட நிகழ்வுகளே.

எனினும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாரின் இராஜதந்திர நடவடிக்கைகள் மஹிந்த அவர்களுடைய முன்னைய அரசாங்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதைப் போல வலுவான நிலையில் இருக்கமாட்டா என்பதையும் இவ்விடத்தில் கூறத்தான் வேண்டும். அதற்காகக் கூட்டமைப்பாரின் இராஜதந்திர நடவடிக்கைகள் தமிழினத்திற்குத் தேவையில்லை என்னும் எண்ணப்பாங்கில் கருத்துக் கெடுக்காமல்விடப்படுவதும் விவேகமானதொன்றல்ல. எனவே மஹிந்த அவர்கள் இனி ஆட்சியமைக்கும்போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் தமது இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னரைப்போல இலகுவாக மேற்கொள்வதும் மிகவும் கடினமானதே. எனினும் அவர்கள் தமது மேற்குலகின்பால் மேற்கொள்ளும் முறையீடுகளையும், இந்திய வல்லாதிக்கத்தின் கவனத்திற்கு அவர்களால் முன்வைக்கப்படும் முறையீடுகளையும், அமெரிக்காவின் அவதானத்தின் பால் அவர்களால் எடுத்துரைக்கப்படும் இலங்கை அரசின் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அசமந்தப்போக்கையும் மிகுந்த கஷ்டத்தின் மத்தியிலும் மேற்றரப்பட்ட முகாம்களுக்கு எடுத்துச்சென்று தமது இராஜதந்திர காய்களை நகர்த்துவதென்பது சாதகமானதொன்றாகவும், தேவையானதொன்றாகவுமே விளங்குகின்றது.

தமிழர் சுயநிர்ணயம், சுயாட்சி என்பவற்றின் பலம், பலவீனம் ஆகியன இவர்களின் இவ்விராஜதந்திர நடவடிக்கைகளில் பெரிதும் தங்கியுள்ளன. ஆதலால் கூட்டமைப்பாரின் இராஜதந்திர நடவடிக்கைகள் தமிழினத்தின் முழுமையான விமோசனத்திற்கு வழிவகுக்காவிட்டாலுங்கூட அவர்களுடைய சுயாட்சி தொடர்பில் தொய்வுநிலை தோன்றுவதையாவது தடுத்துநிறுத்தும்.

இதனால் கூட்டமைப்பார் தொடர்ந்தும் இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுப்பது தமிழர் சுயாட்சி தொடர்பான உலகப்பார்வையை மங்கலடையாமல் பாதுகாக்கும்.

இப்போது அவர்களால் முன்னெடுக்கப்படும் இந்திய மத்திய அரசாங்கத்தின் பாற்பட்ட நெருக்குவாரம் தமிழ்நாடு அரசியல்வாதிகள் அனைவரினதும் ஏகோபித்த அழுத்தத்தை மத்திய அரசாங்கத்தின் மீது பிரயோகிக்கும் நிலையைத் தோற்றுவிக்கவேண்டும்.


இதன்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாரின் இராஜதந்திர நகர்வுகள் தமிழ்நாட்டிலுள்ள திராவிடர் முன்னேற்றக்கழகம், அண்ணா திராவிடர் முன்னேற்றக்கழகம், மறுமலர்ச்சித் திராவிடர் முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, ப.நெடுமாறன் அவர்களின் காங்கிரஸ் கட்சி, வீரமணி அவர்களின் தலைமையிலான திராவிடர் கழகம், இந்திய கம்யூனிஸ்ற் கட்சி, மார்க்சியக் கம்யூனிஸ்ற் கட்சி ஆகிய கட்சிகளை ஏகோபித்த நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வு தொடர்பில் மத்திய அரசை நெருக்கும்விதமாக அமைவது அசாதாரண பலனளிக்கும்.

மேலும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சி அமைவதற்குத்தாம்தமிழ்மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதைச் சாதகமாகவைத்து ஐ.தே.கவின் ஆட்சியை விரும்புகின்ற அமெரிக்காவினதும், ஐரோப்பிய முகாமினதும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின்மீதான இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வுக்கான நெருக்குதலைத் துரிதப்படுத்துவதற்குக் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதற்கமைய அத்தேசம் தொடர்பிலும் முகாம் தொடர்பிலும் தமது இராஜதந்திர நகர்வுகளை இலங்கைத் தமிழ் மக்கள் மிக இருள்சூழ்ந்த இன்றைய காலப்பகுதியில் மேற்கொள்வது சாலவும் பயனளிக்கும் என்பதை இடித்துரைப்பது இக்கட்டுரையின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாரின் இராஜதந்திர நகர்வுகள் என்னும் விடயத்தில் அவர்கள் மேலும் மேலும் துரித கதியில் முன்னகர்வதற்கு உறுதுணையாகவிருக்கும்.

08ஆம் பக்கம் பார்க்க...

மறவன்

## இலங்கையில் இளைஞர் யுவதிகள்



**வரைவிலக்கணம்**

இளைஞர்கட்கான வயதெல்லையாக ஐ.நா முறைமையின் கீழ் 15-24 வயதுக்குழு இளைஞர் யுவதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் பல்வேறு நாடுகள் தமது சொந்த இலக்குகளை அடிப்படையாகக்கொண்டு வயதெல்லையை சிறிது வேறுபடுத்தி யுவதிகட்கான வயதெல்லை 15-29 வயதென எல்லைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**இளைஞர் குடித்தொகை பரம்பல்**

இலங்கையில் இளைஞர் குடித்தொகை 2011இல் மொத்த சனத்தொகையில் 23% மாகவும் 4.4 மில்லியனாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது. இக்கணிப்பீட்டின் பிரகாரம் 50.23 இளைஞர்களும் 49.76 யுவதிகளும் உள்ளனர்.

**இளைஞர்களை நோக்கிய ஓர் புதிய பார்வை**

இலங்கையில் நடந்து முடிவடைந்த 30 வருடகால உள்நாட்டுப்போர், அழிவடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதில் முனைப்போடு செயற்படும் ஓர் வரலாற்றுத் திருப்புமுனைப்போடு எமக்கு அளித்துள்ளது. ஏராளமான இளைஞர்களைக் காவுகொண்ட இக்கொடிய யுத்தம், புதிய தலைமுறையினர் மீது பல சுமைகளை கூட்டியுள்ளது. பல சவால்களின் மத்தியில் வாழும் இன்றைய இளைஞர்கள் உள்நாட்டுப்போர் முடிவடைந்த நிலையில் நல்லிணக்கம் சமூக நீதி, சமாதானத்திற்கான வாய்ப்புக்களை பயன்படுத்துவதில் அக்கறைசெலுத்துவது முக்கியமானதாகும்.

இளைஞர்கள் தமது இளமையான காலப்பகுதியை போரிலும், இடப்பெயர்விலும் கழித்துவிட்ட நிலையில் நம்பிக்கை இழந்து எதிர்காலம் சூன்யமாகிவிட்டதே என சோர்வடைந்துவிட்டநிலையில் இளைஞர்களை நம்பிக்கை உள்ளவர்களாக சமாதானத்தின் தூதுவர்களாக தலைமைகளை பொறுப்பேற்று சமூகத்தின் பங்கு எவ்வாறு அமைந்து உள்ளது?

போரின் பின் ஏற்பட்டுள்ள சமூகப் பிறழ்வு கொலை, களவு, பாலியல் வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், சமூகச் சீரழிவுகள் என அடுக்கடுக்காக நீண்டு செல்லும் சமூகச் சீரழிவுகள் யாவும் எவ்வாறு இடம்பெறுகின்றன? கலாசார விழுமியங்களை கட்டுக்கோப்பாக பேணி வந்த சமூகத்தினரிடையே மாறுபட்ட எண்ணக்கருக்கள் உருவாகுவதற்கு என்ன காரணத்தை கூறப்போகின்றோம்?

எமது நாட்டில் இளைஞர் யுவதிகளின் வளமான காலப்பகுதி கொடூரமான முறையில் சீர்குலைந்து அதற்காக சகல பிரதேசங்களிலும் இளைஞர், யுவதிகளே அதற்கான விலையை செலுத்தினர். ஆயினும் இளைஞர் யுவதிகள் என்ற வகையில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை நாம் எவ்வாறு எதிர்கொண்டுள்ளோம்?

இளைஞர், யுவதிகள் நம் எதிர்காலத்தின் வளங்கள், அவர்களை மேலும் வலுவூட்டுபவர்களாக மாற்றுவதற்கு எமது பங்களிப்பு எப்படி அமையவேண்டும்?

சனநாயகம், நல்லாட்சி என்ற கோட்பாட்டில் உதயமாகியுள்ள புதிய அரசின் ஆட்சி முறையில் சமூக நீதி, சனநாயக செயற்பாட்டிற்கான வாய்ப்புக்கள், அபிவிருத்தி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களோடு, அரசியல் சார் பிரச்சினைகளையும் இளைஞர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவ்விடயங்கள் யாவும் இளைஞர் யுவதிகளை மிகப்பாரதூரமாக சிந்திக்கவைக்கும் விடயங்களாகும். பொதுவாகவே இளைஞர்கள் சமூகப் பொறுப்பற்றவர்கள் என்ற விமர்சனங்கட்கு அப்பால், சமூக ரீதியில் அவர்களைப் பொறுப்பாளர்களாக உருவாக்கவேண்டிய தேவை இன்று உள்ளது.

இன்றைய இளைஞர்கள், யுவதிகள் தமது உரிமைகளை நிலைநாட்டி, தமது சக்திமிக்க வளங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்திக்கொள்வதற்கு வழிகாட்டிகளாக நாம் எம்மை உருவாக்கிக்கொள்ளுதல் அவசியம். இங்கே சமூகத்தில் பொறுப்புவாய்ந்த சமூகநிறுவனங்கள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்ற சமூக நிறுவனங்களே இளைஞர்களை உருவாக்குவதில் முதன்மை வகிக்கும் பங்காளிகளாகும்.

இளைஞர்கள் பொறுப்புமிக்கவர்களாகவும் ஒழுக்க விழுமியங்களை பின்பற்றுபவர்களாகவும் வளர வேண்டும் என்று எல்லோருமே எதிர்பார்க்கின்றனர். பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களும் இதனை நோக்கியதாகவே உள்ளது. இவ் ஒழுக்க நெறிகளை பின்பற்றுவதில் முக்கிய வகிபாகம் பெற்றோருக்கே உண்டு. சமூகத்தில் பொறுப்புமிக்கதலைவர்களாக விளங்குபவர்களின் முன்மாதிரியாக வகிபங்கு எமது இளைஞர், யுவதிகட்கு மாதிரியாக பின்பற்றுவதற்கு பொருத்தமானதாக அமைந்துள்ளதா? என்ற கேள்வியும் எம் மத்தியில் உண்டு. இளைஞர் யுவதிகட்கு அவ்வவ் காலங்களில் அவர்களுக்கு ஏற்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். தவறின் சந்ததியே பாதிக்கப்படும்.

இளைஞர் யுவதிகட்கான இக்கைநூல் ஆக்கபூர்வமான தகவல்களை ஒன்றுதிரட்டி அவர்கள் பார்வைக்காக வைக்கப்படுகின்றது.

**இளைஞர் அபிவிருத்தியை முன்நிலைப்படுத்துவதில் ஏற்பட்ட தடங்கல்கள்**

கடந்த 30 வருட காலப்பகுதியில் இலங்கையில் பொருளாதாரக் கொள்கையில் பல மாற்றங்கள் இடம்பெற்றிருந்த போதிலும், மனித வள அபிவிருத்தியில் இவ் அபிவிருத்தியின் தாக்கங்கள் பல சாதக பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தியமை அவதானிக்க முடிந்தது. இளைஞர்களின் சேவைகள், அபிவிருத்தியை மையப்படுத்தி ஓர் அமைச்சு செயற்படுத்தப்பட்டு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆயினும் கடந்த காலத்தில் இடம்பெற்ற இளைஞர் தலைமையிலான உள்நாட்டுக்கிளர்ச்சி, தமிழீழ விடுதலைப்புலிகளுடனான உள்நாட்டுப்போர் என்பன இளைஞர்களை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. இதன் காரணமாக இளைஞர்கள், யுவதிகள் வன்செயலாளர்கள் என வர்ணிக்கப்பட்டனர். இளைஞர்கள் விரக்தியுடையவர்களாக மாற்றப்பட்டமைக்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும், வேலைவாய்ப்பின்மை மிகப் பிரதான காரணியாகவே காணப்பட்டது. போரில் இணைந்து கொண்டவர்கள், போரின் பிடியிலிருந்து தப்பி வெளிநாடுகட்கு சென்றவர்கள் என இளைஞர்கள் சிதறடிக்கப்பட்டனர். இறுதிக்கட்ட போரின்போது இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களாகவே உள்ளனர். ஆகவே இலங்கை ஓர் வளமான சந்ததியினரின் தகுதி நிலை பயன்பாட்டை இழந்துவிட்டது. ஆயினும் 1979ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இளைஞர் வெளிவிவகார அமைச்சின் தீவிரமான செயற்பாட்டின் முன்னெடுப்பு காரணமாக இன்று நாட்டின் இளைஞர்கள் வளமான ஓர் காலப்பகுதியினுள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதற்கமைய தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் அதன் செயற்பாடுகளும், பல கோணங்களில் இளைஞர் ஆற்றல்களை வலுப்படுத்தி, அவர்கள் உள்ளார்ந்த வினைத்திறனின் உயர்ந்த பட்சமட்டத்தை பெற்றுக்கொள்வதில் பல முயற்சிகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இளைஞர் வேலைவாய்ப்பு என்ற விடயம் முக்கியமாக கருதப்பட்டமையினால் 2007இல் தேசிய இளைஞர் தொழில் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டது. ஆயினும் இளைஞர்கட்கான ஓர் தேசிய இளைஞர் கொள்கை உருவாக்கப்படுவது இன்று மிக அவசியமானதாக உள்ளது. இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு தேசிய இளைஞர் கொள்கைக்கான ஓர் வரைவு சமர்ப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இளைஞர் யுவதிகட்கான பல வேலைத்திட்டங்களை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படுத்தி வந்தபோதிலும் இந்நிறுவனங்களுக்கிடையே முறையான தொடர்புகளோ அன்றி ஆழமான செயற்பாடுகளோ முன்னெடுக்கப்படாமை காரணமாக பல முரண்பாடுகளை சந்திக்க நேரிடுகின்றது. அத்துடன் இளைஞர்கள் தமது செயற்பாடுகளில் தலையீடு செய்யும் ஏனைய நிறுவனங்களோ, அன்றி நபர்களோ தம்மை அல்லது தமது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதாக எண்ணுகின்றனர்.

**தேசிய இளைஞர் கொள்கையும், அதன் அடிப்படை கோட்பாடுகளும்**

இளைஞர் யுவதிகட்கு ஆற்றல், வாய்ப்புக்கள் வழங்கக்கூடிய சூழலை ஏற்படுத்தல்.

இளைஞர் யுவதிகள் தன்னம்பிக்கை ஆற்றல் கொண்டவர்களாக செயற்பட உதவும் நிலைமைகள் உருவாக்குதல்.

இளைஞர் யுவதிகள் தமக்கும், சமூகத்திற்கும் பொறுப்பேற்று செயற்படக்கூடிய வகையில் அவர்கட்கு வலுவூட்டுதல்.

மேற்காட்டப்பட்டுள்ள வலுவான இலக்குகளை அடைவதில் பல பன்முகத்தன்மை கொண்ட அடிப்படைச் செயற்பாடுகளின் ஊக்குவிப்பு இன்று இளைஞர் யுவதிகட்கு மிக அவசிய தேவையாக உள்ளது.

இளைஞர் யுவதிகள் உடல், உள, ஆன்மீக, பொருளாதார, கலாசார ரீதியிலான வழிகளை முன்னேற்றல்.

இலங்கையின் அரசியலமைப்பிற்கு அமைய சனநாயக கோட்பாடுகட்கும், மனித உரிமைகட்கும் மதிப்பளித்தல்.

இளைஞர் யுவதிகள் அபிவிருத்தியில் ஈடுபடும் ஏனைய நிறுவனங்கள்/ அமைப்புக்கள் ஆகியவற்றின் வேலைத்திட்டங்களை இனம் காணுதல்.

இளைஞர் பணியில் ஈடுபட்டுள்ள சகலரினதும் ஆக்கம் சார் திறன்களை மேம்படுத்தல்.

சமூகம், நாடு என்ற ரீதியில் பரந்த அளவிலான சமூகப் பிரச்சினைகளை அறிந்துகொள்ளக்கூடிய அறிவினை மேம்படுத்தல்.

சகல மட்டங்களிலும் இளைஞர் யுவதிகள் பங்குபற்றி, தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஆற்றலை விருத்தி செய்தல்.

**இளைஞர் யுவதிகளின் இலக்குகள்**

இளைஞர் யுவதிகள் சமூக நீதியை நிலைநாட்டி அமைதியான சமூகமொன்றை உருவாக்குவதில் துடிப்பாக பங்கேற்கும் வகையில் அவர்கட்கான ஆற்றலையும் வளங்களையும் வழங்குதல்.

கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகளினூடாக அவர்கள் அறிவு, திறன்களை விருத்திசெய்ய உதவுதல், ஊக்கமளித்தல்.

போரின் பின்னரான நல்லிணக்க செயற்பாட்டில் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான செயற்பாடுகளிலும் இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்தல்.

இளைஞர் யுவதிகள் பணத்திற்காக மட்டுமன்றி தமது சேவைகளை தொண்டு அடிப்படையில் ஆற்றுவதற்கு அவர்களைத் தயார்படுத்தல்.

இளைஞர்கட்கு பொருளாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

இளைஞர் யுவதிகள் உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு வசதிகளை இலகுவாக்கல்.

வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தல்.

சகல வடிவங்களிலும் பாரபட்சங்களையும் சுரண்டலையும் எதிர்த்துப் போராடுவதற்கான திறன்களை அபிவிருத்தி செய்தல்.

இளைஞர் யுவதிகளின் தலைமை பண்பை வளர்த்தல்

தகவல்களை தேடிப்பெற்று விமர்சன ரீதியாகவும், சுயாதீனமாகவும் செயற்படும் ஆற்றலை அதிகரித்தல்.

சமூக சேவை நிறுவனங்களோடு இணைந்து செயலாற்ற ஊக்குவித்தல்.

இளைஞர் யுவதிகளின் பாதுகாப்பு, வளர்ச்சி அபிவிருத்திக்கு ஆதரவான குடும்பங்கள், சமூகங்களை அபிவிருத்தி செய்தல்

குடும்பங்கட்கும், சமூகங்கட்கும் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்தல்.

இளைஞர் யுவதிகள் வன்செயல்களில் ஈடுபடுவதை தடுத்தல்.

இளைஞர் யுவதிகளை பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்கும் சமூக மட்ட வழிமுறைகளை பலப்படுத்தல்.

தொடரும்...

---

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவர் திருந்தி நடக்கவேண்டும் அல்லது பதவியினை விட்டு விலகிச்செல்லவேண்டும். நான் மீண்டும் வவுனியா மாவட்ட அரச அதிபருக்கு சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தித்தருமாறு ஒரு கடிதம் எழுதுகின்றேன். இதற்கும் இவர் பதிலளிக்காது போனால் இவருக்கு எதிராக நடவடிக்கைகள் தீவிரமாக ஆரம்பிக்கப்படும். சிங்கள, தமிழ், முஸ்லீம் துவேச எண்ணத்தோடு செயற்படுகின்றாரா? என்பது இதிலிருந்து மக்களுக்கு புரிந்துகொள்ளக்கூடியதாகவிருக்கும். வன்னிப்பிரதேசம் எமது சொந்த மண். எமது பிரதேசத்தில் வாழும் மக்கள் எமது மக்கள். அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதை விடுத்து முட்டுக்கட்டையாக செயற்படும் வவுனியா அரச அதிபர் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவதற்கான அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். அதேநேரம் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், வடமாகாணசபை அமைச்சர்களும், 05 வடக்குமாகாணசபை உறுப்பினர்களும் இதுவரை சாதித்தது என்ன? என்று மக்கள் வினவுவதில் தவறேதுமில்லை. நாம் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் இதற்கான தீர்வினை நிச்சயமாக மேற்கொள்வோம் என்றும், அரச அதிபருக்கான இறுதி எச்சரிக்கையாக அமைச்சர் ப.சத்தியலிங்கம் இதனைக் குறிப்பிட்டார்.

# கிழக்கு மாகாண அரசியலும், அதன் பின்னணியும்


1949ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உருவாக்கத்துக்குப் பின்னர் அக் கட்சி கிழக்கிலங்கையிலும் துரிதகதியில் வளர்ச்சியடைந்து வந்தது. கிழக்கிலங்கையில் அக்கட்சியின் துரித வளர்ச்சிக்கு அன்று இளைஞராக இருந்த செ.இராசதுரை அவர்கள்மூலகாரணியாக விளங்கினார். அவர் சிறந்த தி.மு.க பாணி மேடைப் பேச்சாளராக விளங்கியதோடு எழுத்தாளராகவும் தனது ஆரம்பகால அரசியல் நகர்வில் தோன்றினார். அவருடைய அழகு தமிழ்ப் பேச்சாற்றல் அவருக்குச் 'சொல்லின் செல்வர்' என்னும் நாமத்தையும் பெற்றுக்கொடுத்தது.

அன்னார் இளைஞனாக இருந்தபோது கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழரசுக் கட்சியைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வளர்த்தெடுப்பதற்காக அயராது பாடுபட்டார். பல இடங்களில் அடி, உதைகள் உட்பட்ட தாக்குதல்களுக்கிலக்காகி இரத்தஞ் சிந்திக் கிழக்கிலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் கட்சியை வளர்த்தெடுத்தார். அக்காலத்தில் மாணவர்களாக இருந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் இவருடைய நடவடிக்கைகளில் ஈடுபாடுகொண்டு தமிழரசுக் கட்சியின் மீது அபிமானங்கொண்டதோடு தானும் இராசதுரை அவர்களோடு இணைந்து கட்சி வளர்க்கும் பணியில் ஈடுபட்டார். இப்பணியின் போது அவருடைய இயல்பான ஆற்றலை இனங்கண்ட இராசதுரை அவர்கள் காசி ஆனந்தன் அவர்களைத் தமிழ் நாட்டுக்கே அனுப்பிச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பட்டப்படிப்பைக் கற்பித்தார்.

இவ்வாறாகத் தமிழரசுக் கட்சியானது கிழக்கிலங்கையில் இராசதுரை அவர்களினால் கட்டி வளர்க்கப்பட்டுக் கொண்டிருந்தபோது அக்கட்சியில் மூதூர் தங்கத்துரை, பட்டியிருப்பு இராஜமாணிக்கம் போன்றவர்களும் முக்கியஸ்தர்களாக விளங்கியதோடு, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்தார்கள். அத்துடன் இஸ்லாமிய மக்களுக்குள்ளும் தமிழரசுக்கட்சியின் மீது ஈடுபாடு அமைவதற்கு இராசதுரை அவர்கள் பெரிதும் காரணியாகவிருந்தார். இஸ்லாமிய பிரமுகர்களுக்குள் தமிழரசுக் கட்சியின் மீது ஈடுபாடு வைத்திருந்தவர்கள் பலர் அக்கட்சியின் கொள்கைப் பிரச்சார வாரப் பத்திரிகையான 'சுதந்திரன்' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதியும் வந்துள்ளார்கள். பின்னாளில் இக்கட்சியின் வடக்குத் தலைமையின் இஸ்லாமியர் தொடர்பான புறக்கணிப்பும் கிழக்கிலும் இதேநிலை காணப்பட்டதாலும் இஸ்லாமியப் பிரமுகர்கள் அங்கட்சியிலிருந்து விலகி இஸ்லாமிய குறியீடுகளைக் கொண்ட கட்சிகளில் இணைந்துகொண்டார்கள். இதைப்போலவே இக்கட்சியிலிருந்த கிழக்குத் தலைமையினரும் வடபகுதி தலைமையால் ஓரங்கட்டப்பட்டு வந்துள்ளார்கள். இதன் உச்சக் கட்டமாகவே இராஜதுரை அவர்களும் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தின் கீழும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தின் கீழும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்களினால் மோதவிடப்பட்டார்கள். இம் மோதலில் அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக இராசதுரை அவர்கள் வெற்றி பெற்றும் காசி ஆனந்தன் அவர்கள் தோற்றும் அதன் விளைவாக கிழக்கிலங்கையின் அரசியலில் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் அக்கட்சியின் தமிழர் உரிமைப் போராட்டங்களில் முன்னணி வகித்தவருமான இராசதுரை அவர்களின் அரசியல் தடம்புரண்டு சென்றமையும், அதன் விளைவாகக் கிழக்கிலங்கையின் அரசியலிலும் தமிழர் தனிக் குறியீட்டு அரசியலிலும் குறிப்பிடத்தக்க வித்தியாசமான பிரதிபலிப்புக்கள் தோன்றியமையும் தெரிந்ததே.

இப்பிரதிபலிப்புக்கள் தொடர்பில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பகுப்பாய்வு செய்து வடக்கு கிழக்குத் தமிழ் மக்களினதும், தமிழ்பேசும் மக்களினதும் ஒற்றுமைக்கும், வடக்குக் கிழக்கின் இணைவின் பாலான அடக்குமுறையாளருக்கான எதிரான நடவடிக்கைகளுக்கும் வலுச் சேர்ப்பதற்கும் உறுதுணையாகவிருக்கும் என்பதால் ஒவ்வொன்றாக உற்றுநோக்கி ஆய்வு செய்வோமாக. முதற்கட்டமாக வடக்கின் தமிழ்த்தலைமை தொடர்பிலான இஸ்லாமியர்களின் அதிருப்தியும் அதன் விளைவாக இஸ்லாமியர்களை அடையாளப்படுத்தும் கட்சிகளும் உருவாக்கப்பட்டு அவர்கள் அக்கட்சிகளின் மீது அபிமானங்கொள்ளத் தொடங்கினார்கள். இதனால் கிழக்கிலங்கையில் மட்டுமல்ல வடக்கிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது இஸ்லாமியர்கள் வைத்திருந்த பெருமளவு அபிமானத்தையிழந்தது.

இது இவ்வாறிருக்கத் தமிழரசுக் கட்சியின் ஒவ்வொரு மாநில மாநாட்டிலும் அக்கட்சிக்கான தலைவராக ஒவ்வொரு புதியவர் நியமிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. ஆனால், தொடர்ச்சியாக இடம்பெற்ற அக்கட்சியின் மாநில மாநாடுகளில் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் வடக்கைச் சேர்ந்தவர்களாகவே விளங்கினர். இவ்விடத்தில் வடக்கின் தலைமையில் சட்டம் படித்தவர்களின் ஆதிக்கம் பெரிதும் மேலோங்கியிருந்தது. அவர்களின் சட்ட அறிவு கட்சியின் உள்விவகாரங்களில் மட்டுமல்ல இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பிலும், உரிமைக்கான போராட்டங்கள் தொடர்பிலும் திடீர்ப் பல்டிகளை அடித்துத் தமது நாடாளுமன்ற அரசியல் நலனைத் தொடர்ச்சியாகப் பாதுகாத்து நின்றதோடு, அவர்களுடைய இந் நடிப்புகளை மக்கள் இனங்காணாதவாறு அவர்கள் படித்துச் சித்தியடைந்த சட்ட நுணுக்கங்களைக் கச்சிதமாகப் பயன்படுத்தியே மிகச் சாதுரியமாகத் தப்பிக்கொண்டார்கள். இவர்கள் தமிழ் மக்களிடம் வாக்குகளைப் பெருமளவில் சேகரித்து நாடாளுமன்றஞ் செல்வதைத் தக்கவைத்துக்கொள்வதற்காகத் தான் போராட்டங்களை நடத்தினார்கள் எனவும், நாடாளுமன்றப் படியேறித் தமதும் யாழ்ப்பாணக்குடாநாட்டைச் சேர்ந்த ஆங்கிலப் புலமை சார்ந்த மேட்டுக்குடியினரதும் நலன் பேணி நின்றார்கள் என்பதையும் பின்னாளில் இராசதுரை அவர்களே நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். தமிழ்மக்களுக்குள்தேசிய உடையணிந்தும் கட்சிச் சால்வைகளோடும் பவனி வந்து தரையில் அமர்ந்து வாழையிலைகளில் உணவருந்தி வேடதாரிகளாக வலம் வந்த இச் சட்டம் படித்த தலைவர்கள் கொழும்பு மட்டத்திலும், சர்வதேச அளவிலும் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், ஒன்றுகூடல்கள், மாநாடுகள் எனப் பங்குபற்றிகோட்சூட் அணிந்துபங்குபற்றித் தமது ஆங்கிலப் புலமைவாய்ந்த சட்ட மேதைமையையும் வளப்படுத்தியதோடு தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள் அற்ற நிலையைச் சிங்கள மேட்டுக்குடியினரதும் உலக ஆதிக்க சக்திகளின் நலனுடன் சார்ந்தவையாகப் பயன்படுத்தினார்கள். உண்மையில் இவர்களால் நடத்தப்பட்ட அறவழிப் போராட்டங்களின் இவ்வர்க்க நலனைப் பாதுகாப்பதற்கு தமிழரின் அடிமைத்தனம் வாய்ப்பாகவுள்ளதே என்னும் அவர்களின் உள்ளூரில் பின் பாற்பட்டதே. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளின் தன்மையை அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாத நிலையில் நீடித்துச் செல்வதை இவ்வர்க்க நலனின் பின் அவர்கள் மனதளவில் விரும்பியிருந்தார்களெனவே கூறவேண்டும். உள்ளூர்க் கைத்தறி நெசவினால் செய்யப்பட்ட கதராடையணிந்து பாரிஸ்டர் காந்தி அவர்கள் பிரித்தானியரோடு இந்தியாவின் சுதந்திரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றமையும் அப்பேச்சுவார்த்தை முடிவடைந்தவுடனேயே மிகவும் மனம் வருந்தி எதிரியோடு பேச்சுவார்த்தைக்கு வந்தது மிகவும் முட்டாள்த்தனமானது



எனவும், இப்பேச்சுவார்த்தையின் போது பிரித்தானிய ஆட்சியினால் வெளியிட்ட கருத்துக்களைத் தான் ஏற்றுக்கொண்டிருந்தால் இந்தியாவிற்கான சுதந்திரத்தை என்னால் ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றுவது மட்டுமல்ல இனி ஒரு போதும் இந்திய மக்களின் அடிமைத் தளையை அறுத்தெடுக்க முடியாத நிலை ஒன்று உருவாகுவதற்கு வழிவகுத்ததாகவுமிருக்கும் எனக் கருத்து வெளியிட்டிருந்தார். காந்தியாருக்கே எதிரிகள் தொடர்பில் இந்நிலையென்றால் கோட்சூட் அணிந்த இலங்கைத் தமிழ்த்தேசியக் கனவான்களுக்கு எதிரிகள் தொடர்பில் எந்நிலை இருந்திருக்குமென்பதைக் கூறவுந்தான் வேண்டுமோ? இன்றுங்கூட அவ்வாறான தமிழ்த்தேசியக் கனவான்களின் எதிரிகள் தொடர்பானது மட்டுமல்ல. துரோகிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளும் இணைவுகளும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை எந்தளவுக்குச் சீர்குலைக்கும் என்பதை ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும், குடிமகளும் சீர்தூக்கிப் பார்த்து உடன் விழிப்படையவும் முன்வர வேண்டும்.

இவ்விடயத்தில் வடக்கின் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்ற தமிழரசுக்கட்சியின் தலைவர்களுக்கு அடுத்து நோக்கப்பட வேண்டிய நிலையில் கிழக்கின் 'இராசதுரை' அவர்கள் இருந்தார் என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். வடக்கின் தேர்தல் தொகுதிகளில் ஒன்றான வட்டுக் கோட்டையில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1970க்கு முன் சுமார் 12,000 மேலதிக வாக்குகளினால் நாடாளுமன்ற உறுப்பினராகத்தெரிவு செய்யப்பட்ட அமிர்தலிங்கம் அவர்களே வடக்கில் அதிகளவு மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மேலதிக வாக்குகளை மிஞ்சியதாக இராசதுரை அவர்கள் கிழக்கின் மட்டக்களப்புத் தொகுதியில் அக்காலப்பகுதியில் சுமார் 17,000 மேலதிக வாக்குளைப்பெற்று வெற்றி பெற்று வந்தார். எனவே தமிழரசுக்கட்சியின் சார்பில் வடக்குக் கிழக்கில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அக் கட்சியினரில் இராசதுரை அவர்களே அசாதாரணமான மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியிருந்தார். அவருடைய அவ்வெற்றியானது இலங்கை முழுவதிலும் கூட அசாதாரணமான மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்று வந்த சிறிமாவோ அம்மையாரின் வெற்றியை அண்மித்திருந்தது. இவ்வாறாகத் தமிழரசுக்கட்சிக்குள் மிகவும் பலமிக்கவராகவும் தி.மு.க பாணியிலான அரசியல்வாதியாகவும் விளங்கிய இராசதுரை அவர்களது கிழக்கு என்னும் பேதத்திற்கு அப்பாற்பட்டு மிகவும் துரிதமாகவே கட்சித் தலைவர்ப் பதவியை வழங்கத் தவறியமை அக்கட்சியின் வடக்குத் தலைமையின் பிரதேச ரீதியான பார்வையின் வெளிப்பாடு எனவே கூறவேண்டும்.

இதன் காரணமாகத் தமிழ் மணங்கமழ்ந்த நிலையில் தமிழரசுகட்சியின் தொண்டராகவும், எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்து அக்கட்சியைக் கிழக்குத் தமிழருக்குள் மட்டுமல்ல இஸ்லாமியர்களுக்குள்ளும் இட்டுச் சென்றதன் மீதான புறக்கணிப்பு கிழக்கில் அக்கட்சியின் பலத்தைத் தமிழ் மக்களுக்குள்ளும், இஸ்லாமிய மக்களுக்குள்ளும் வெகுவாகக் குறைத்தது. இதன் விளைவாகத் தமிழ்மணம் கமிழ்ந்தோர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அமைச்சரானமை கிழக்கின் தமிழுரிமை உணர்வுகளுக்கு பெரும் சவாலாக விளங்கியதோடு, அவரைத் தொடர்ந்து அக்கட்சியைச் சேர்ந்த கிழக்கிலங்கை முக்கியஸ்தர்களும் ஒதுங்கிக் கொண்டார்கள். ஆரம்பத்திலேயே கிழக்கிலங்கையின் இஸ்லாமியர்கள் தமிழ்பேசுபவர்களாக இருந்தபோதிலுங் கூடத் தமிழரசுக்கட்சியின் இஸ்லாமிய விரோதப்போக்கை இனங்கண்டு தமது சமூகத்தின் அடையாளக் குறியீடுகளைக்கொண்ட கட்சிகளை ஆதரிக்கின்றமை இஸ்லாமியர்களுக்குள் தமிழரசுக் கட்சிக்கிருந்த அபிமான வீச்சைப் பெரிதும் குறைத்தது. பின்னாளில் இராசதுரை தொடர்பில் உருவான பின்னணியை மையமாகக் கொண்டு கட்சியின் கிழக்கு அபிமானம் தமிழ் மக்களுக்குள்ளும் பெரும் வீழ்ச்சியை உருவாக்கியது. இதனால் கிழக்கிலங்கையிலும் இஸ்லாமியர்களுக்குள் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் மீதான அபிமானம் தமிழருக்குள்ளும் பெரியளவில் வியாபிக்கத் தொடங்கியது.


இதன் விளைவாகத்தான் பட்டிருப்பு, பொத்துவில், கல்குடா போன்ற கிழக்கிலங்கையின் தேர்தல் தொகுதிகளை தென்னிலங்கைக் கட்சிகள் கைப்பற்றிக்கொள்ளக்கூடிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இக்கால நகர்வின் தொடர்ச்சியாக இடம்பெற்ற ஆயுதப்போராட்டத்தின் போது, கிழக்கிலங்கையின் வாழைச்சேனையிலிருந்து கருணா அவர்கள் தன்னை விடுதலைப்புலிகள் அமைப்பில் போராளியாக வலுவாக வலிந்து மிகவும் பற்றுடன் பலவருடங்களாகப் பாடுபட்டு வந்தார். இராசதுரை அவர்கள் எவ்வாறு தமிழரசுக் கட்சியில் தனது பங்களிப்பை வழங்கினாரோ அது போன்றே கருணா அவர்களும் விடுதலைப்புலிகள் அமைப்பிலும் தனது பங்களிப்பை வழங்கினார். எக்காரணத்தினால் இராசதுரை அவர்கள் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அமைச்சருமாகி ஆளுவோருக்குச் சார்பாக மாறினாரோ அதுபோலவே கருணாவும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்னுமொரு புதிய அமைப்பை உருவாக்கி ஆளுவோருக்கு சார்பாக மாறினார். எனவே இவர்கள் இருவரும் ஆளுவோர் தரப்பினராக மாறியமை அவர்களுடைய சுயத்தின் பால் மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல. அவர்கள் அந்நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதே நிஜமாகும். இராசதுரை அவர்கள் இந்நிலைக்கு ஆளாகியமை தொடர்பில் இக்கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுவிட்டது. இனி கருணா எவ்வாறு இந்நிலைக்கு ஆளாக்கப்பட்டார் என்பதை நோக்குவோம்.

12ஆம் பக்கம் பார்க்க...

**கருணைக் கண்ணன்**

# பிராந்தியச் செய்திகள்



## 46 சாராய போத்தல்களுடன் நபரொருவர் கைது



யாழ்.பிரதான வீதியில் 46 சாராய போத்தல்களுடன் கிளிநொச்சி, விசுவமடு பகுதிக்கு செல்லவிருந்த நபர் ஒருவர் நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். மாலை குறித்த நபர் பிரதான வீதியில் முழுவதும் அடைக்கப்பட்ட சவர்க்கார பெட்டியுடன் நின்றிருந்த நிலையில் பொலிஸார் அதனை ஆராய்ந்தபோது சாராய போத்தல்கள் வெளிப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் பொலிஸார் விசாரணை செய்தபோது, தான் விசுவமடு பகுதியை சேர்ந்தவர் எனவும், சாராயத்தை விற்பனைக்காக கொண்டு சென்றதாகவும் கூறியுள்ளார். மேலும், இந்த நபர் தொடர்ச்சியாக இப்படி சட்டவிரோதமான முறையில் சாராயம் கொண்டு சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

## மாணவி கொலையின் விசாரணை இடைக்கால அறிக்கை கையளிப்பு



யாழ். புங்குடுதீவில் பாடசாலை மாணவி வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளின் இடைக்கால அறிக்கை யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் குழு இந்த அறிக்கையை கையளித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகரதெரிவித்தார்.எவ்வாறாயினும், விசாரணைகள் இதுவரையில் நிறைவடையவில்லை எனவும், பல்வேறு கோணங்களிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

புங்குடுதீவில் கடந்த மாதம் 13 ஆம் திகதி, பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்யா கடத்திச்செல்லப்பட்டு, துஷ்பிரயோகத்திற்குஉட்படுத்தப்பட்டதன் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 10 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இதேவேளை, புங்குடுதீவு மாணவியின் படுகொலையைக் கண்டித்தும், அவருக்கு நீதி வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விமானப்படையிலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு பொது மன்னிப்பு காலம்



விமானப்படையில் கடமையாற்றி உரிய முறையில் விலகாமல் சென்றவர்களுக்கு பொது மன்னிப்பு காலமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது. சேவையை கைவிட்டு சென்றுள்ள விமானப்படைச் சிப்பாய்கள் மற்றும் பெண் சிப்பாய்களுக்கு இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. 2009ம் ஆண்டு ஜூன் மாதம் 1ம் திகதி முதல் 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையில் இவ்வாறு சேவையை விட்டு உரிய முறையில் விலகாதவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் வார நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரையில் விமானப்படைத் தலைமையகத்திற்கு சென்று பதவி விலகிக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், எவ்வளவு காலத்திற்கு இந்த பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விபரங்களை விமானப்படைத் தலைமையகம் வெளியிடவில்லை.

---

பன்னாட்டு போதைப்பொருள் ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு அது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் பெருந்திரள் மாண வர் கலந்து கொண்ட கவனயீர்ப்புப்பேரணி ஒன்று நடைபெற்றது. செம்மலை மகாவித்தியாலத்திற்கு முன்பாக நடைபெற்ற இப்பேரணியில் வடமாகாண சபை உறுப்பினர் மதிப்பிற்குரிய துரைராசா ரவிகரன் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கருத்துரையினை வழங்கியிருந்தார்.

இது தொடர்பில் மேலும் அறிய வருகையில், முல்லைத்தீவு கல்வி வலயத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட பன்னாட்டு போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டதான கவனயீர்ப்புப்பேரணிகளில் ஒன்று முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்திற்கு முன்பாக 2015-06-26 அன்று காலை நடைபெற்றது.

முல்லை.செம்மலைமகாவித்தியாலயம், கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை, அளம்பில் றோ.க.வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலையைச்சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டு போதைப்பொருள் ஒழிப்பு பதாகைகளை தாங்கியும் போதைப்பொருள் ஒழிப்பு வாசகங்களை ஒருமித்து ஒலித்தும் தமது கவனயீர்ப்பு நடவடிக்கைகளை தொடர்ந்திருந்தனர். பாடசாலையின் ஆசிரியர்கள், அதிபர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் மதிப்புக்குரிய துரைராசா ரவி கரன் அவர்களும் கலந்து கொண்ட இக்கவனயீர்ப்புப்பேரணியானது ஏறத்தாழ அரைமணி நேரம் சாலை மறித்து தமது விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

பேரணி நிறைவில் முல்லை.செம்மலை மகாவித்தியாலய மூன்றலில் ஒன்று சேர்ந்த மாணவர்களின் முன்னர் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் கலந்து கொண்டிருந்த வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் அவர்களும் செம்மலை பாடசாலை அதிபர் திரு.ந.விஜயரத்தினம் அவர்களும் விழிப்புணர்வுரைகளை ஆற்றி மாணவர்களின் கவனயீர்ப்பு நடவடிக்கையை நிறைவு செய்திருந்தனர்.


## பாடசாலை மாணவிகளை புகைப்படம் எடுத்த இருவர் கைது



யாழ்.கந்தரோடை பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு முன்னால் நின்று மாணவிகளை புகைப்படம் எடுத்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான இருவரும் அளவெட்டி தெற்கு பகுதியினைச் சேர்ந்த 21, மற்றும் 23 வயதுடைய நபர்கள் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சந்தேக நபர்களை சிவில் உடையில் சென்ற பொலிஸார் கைது செய்திருந்தனர்.

## மூதூரில் பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்ட நபர் கைது



திருகோணமலை நகரிலும், மூதூர் பிரசேத்திலும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை விசேட குற்ற புலனாய்வு பிரிவினர் மதியம் கைது செய்துள்ளனர். திருகோணமலை மின்சார நிலைய வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரை புலனாய்வு பொலிசார் திருகோணமலை துறைமுக பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர் மீது திருகோணமலை நீதிமன்றில் 36 வழக்குகளும். மூதூர் நீதிமன்றில் 9 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற விசாரணைகளுக்கு சமூகமளிக்காத நிலையில் இவர் மீது பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டு இருந்தது. கைது செய்யப்பட்டவர் மூதூர் தக்வா நகரைச் சேர்ந்த முகமட் முஜாத் வயது 30 என்பவர் ஆவார்.

## றைட் அக்கரை தோட்டத்தில் முச்சக்கரவண்டி-பேரூந்து விபத்து



றைட் அக்கரை தோட்டத்தில் இருந்து சாமிமலை நெடுஞ்சாலையில் மஸ்கெலியா நோக்கி வந்த முச்சக்கரவண்டி மாலை 6.30 மணியளவில் தனியார் பேருந்துடன் மோதியதால் முச்சக்கரவண்டி சாரதி காயங்களுக்குட்பட்டு கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளாகிய முச்சக்கரவண்டி மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

---

**போதை பொருள் சாக்கடை கடலுக்குள் தம்மை அறியாமல் விழும் மாணவர்கள் - வைத்திய கலாநிதி சி.சிவமோகன் ஆதங்கம்**

மது ஒழிப்பு நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் நடைபெற்ற கவனயீர்ப்பு ஊர்வலத்தில் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் இன்று நம் தமிழர் தேசத்தில்பெரும்பாலானமாணவர்களும், இளைஞர்களும் மது பாவனைக்கு அடிமையாகி கலாச்சார சீரழிவுகளையும், கல்வி விழுமியங்களையும் சிதைக்கும் நடவடிக்கைகளை செய்வதற்கு தூண்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு இராணுவ புலனாய்வாளர்களும் மாணவர்களையும், இளைஞர்களையும் வேண்டுமென்றே மது பாவனைக்கு அடிமையாக்கி வருகின்றனர்.

எனவே மது ஒழிப்பு நாளை முன்னிட்டு நடைபெறும் கவனயீர்ப்பு ஊர்வலத்தினூடாக எமது மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் மது பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி எமது தமிழர் தேசத்தில் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் கலாச்சார சீரழிவுகளை தடுத்து நிறுத்தி எமது தமிழர் தேசத்தை வளம் மிக்கதொரு சமுதாயமாக மாற்றுவதற்கு மாணவர்களும், இளைஞர்களும் முன்வரவேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் போதை பொருள் பாவனை என்னும் சாக்கடை கடலுக்குள் மாணவர்கள் தம்மை அறியாமலேயே விழுத்தப்படுகின்றனர். போதைவஸ்து வியாபாரிகள் தமது வியாபாரத்துக்கான இலகு களமாக பாடசாலை மாணவர்களை பாவிக்கிறார்கள்.

எனவே மாணவர்கள் விழிப்புணர்வுடன் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். மாணவர்களே எதிர்கால சந்ததியின் சொத்து. எனவே அவர்களை களங்கமற்றவர்களாக வளர்க்கப்படவேண்டிய பொறுப்பு எமது இன்றைய சமுதாயத்தின் சவாலாக மாறியுள்ளது என தெரிவித்தார்.

---

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

அத்தோடு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா அவர்கள் தாம் தமிழ் மக்களுடைய வாக்குகளை மைத்திரி தரப்பினருக்குப் பெற்றுக்கொடுத்தமையால் நன்றிக்கடனாக மைத்திரி அவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பாரென சாத்தியமற்ற நம்பிக்கையை வெளியிட்டு வருவதோடு, எதிர்க்கட்சியில் தலைவர்ப் பதவி தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு அமையக் கூடிய ஏதுநிலையொன்று அமைந்து வருவதை இனங்கண்ட கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் மைத்திரி அரசானது தொடர்ந்து பத்து வருடங்கள் இன்னும் ஆட்சியிலிருக்குமாயின் நிச்சயமாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பாரென எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவியை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் அங்கலாய்ப்பின் பாற்பட்டு கருத்து வெளியிட்டிருப்பது இவர்கள் இதுவரையில் மேற்கொண்ட சர்வதேசியளவிலானதும், தேசந்தழுவியளவிலானதுமான இராஜதந்திர நடவடிக்கைகள் தொய்வு நிலையடைவதோடு இனிமேற்கொள்ளவேண்டிய இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர்கள் ஆர்வமின்றி முடங்கிவிடுவார்கள் என்பதையும் எடுத்துக்கூறி அவர்களைத் தமிழ் மக்களின் நலன்கருதி இராஜதந்திர நகர்வுகளுக்காக முடுக்கிவிடுவதும் இக்கட்டுரையின் தலைப்புக்கேற்ற உபாயமெனவுங்கொள்ளமுடியும்.




## வடிவேலுவின் தியாகம்



தமிழக மக்கள் எல்லோரையும் தன் நகைச்சுவையால் சிரிக்க வைத்தவர் வடிவேலு, இவர் தன் ரீஎண்ட்ரிக்காக மிகவும் சிரமப்பட்டு வருகிறார். ஆனால், லட்டு மாதிரி ஒரு வாய்ப்பை வடிவேலு இழந்துள்ளார். விஜய் சேதுபதி திரைப்பயணத்தில் மெகா ஹிட், வசூல் சாதனை படைத்த படம் சூது கவ்வும்.

இப்படத்தில் முதலில் விஜய் சேதுபதிக்கு பதிலாக வடிவேலு தான் நடிப்பதாக இருந்ததாம். ஆனால், அவர் அப்போது பிஸியாக இருந்த காரணத்தால் அந்த வாய்ப்பு விஜய் சேதுபதிக்கு செல்ல, தற்போது இவர் உச்ச நட்சத்திரமாகி விட்டார்.

## விஜய்க்காக சம்மதிப்பாரா ஏ.ஆர்.ரகுமான்



உலகமே வியந்து பார்க்கும் இசையமைப்பாளர்களில் ஒருவராகி விட்டார் ஏ.ஆர்.ரகுமான். இவர் தற்போது 24 என்ற சூர்யா படத்திற்கு மட்டும் தான் தமிழில் இசையமைத்து வருகின்றார். இந்நிலையில் அட்லீ, விஜய்யுடன் இணையும் படத்திற்கு இசை ஜி.வி. பிரகாஷ், இதனால், இப்படத்தில் ஒரு பாடலை ரகுமான் பாடினால் நன்றாக இருக்கும் என படக்குழு விரும்பியுள்ளது.

இளைய தளபதி படம் என்பதால் ரகுமான் பெரும்பாலும் சம்மதிப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## ஷங்கர் கூட்டணியில் இணைந்த சிவகார்த்திகேயன்



சிவகார்த்திகேயன் வளர்ச்சி தற்போது முன்னணி இயக்குனர்களின் பார்வையில் விழுந்துள்ளது, இவரின் அடுத்த படத்தை பலரும் இயக்க ரெடியாக இருந்தாலும், இவர் புதுமுக இயக்குனர்களுக்கே வாய்ப்பளித்து வருகிறார். இந்நிலையில் இவர் அடுத்து அட்லீயின் உதவி இயக்குனர் பாக்யராஜ் இயக்கும் ஒரு படத்தில் நடிக்க சம்மதித்துள்ளார். இப்படத்தில் சிவகார்த்திகேயன் வித்தியாசமான கதாபாத்திரம் ஒன்றில் நடிக்கவுள்ளாராம்.

இதற்காக ஷங்கர் இயக்கிய ஐ படத்திற்கு மேக்கப் கலைஞர்களாக பணியாற்றியவர்களே தான் இந்த படத்திலும் பணியாற்றவுள்ளதாக கூறப்படுகின்றது. மேலும், ஐ படத்தின் ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராமிடம் இந்த படத்தில் பணியாற்ற பேச்சு வார்த்தை நடந்து வருகின்றதாம்.

## பிரபல நடிகருடன் இணைகிறார் பிந்துமாதவி



கேடி பில்லா கில்லாடி ரங்கா, தேசிங்குராஜா போன்ற படங்களின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களை கவர்ந்தவர் பிந்துமாதவி. இவர் இதுநாள் வரை இரண்டாம் கட்ட நடிகர்களுடன் மட்டுமே ஜோடி சேந்து வந்தார். தற்போது முதன்முறையாக ஒரு முன்னணி நடிகர் படத்தில் நடிக்கவுள்ளார்.

'அரிமாநம்பி' ஆனந்த்ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் படத்தில் முதலில் ப்ரியா ஆனந்த் நடிப்பதாக இருந்தது. தற்போது அவருக்கு பதிலாக பிந்துமாதவி இந்த கதாபாத்திரத்தில் நடிப்பார் என கூறப்பட்டு வருகின்றது.

## பாபநாசம் வெளிவருவதில் சிக்கல்



கமல் நடிப்பில் தயாராகியுள்ள பாபநாசம் படம் வருகிற 3ம் திகதி வெளியீடு என்று அறிவித்தனர். நாளிதழில் கூட இன்று முதல் என்று இருந்தது, ஆனால் திடிரென்று திரையரங்கு உரிமையாளர்கள் நிறுத்திவிட்டனர். ஏனெனில் "உத்தமவில்லன் ரிலீஸ் நேரத்தில் லிங்குசாமியின் கடன் பிரச்சினை குறுக்கே வந்தது.


வெளிநாட்டில் இருந்த கமல், அவசரமாக சென்னை வந்தார். வந்த வேகத்தில் தனது சம்பளம் இல்லாமல் தானே ஹீரோவாக நடித்து 30 கோடி ரூபாயில் லிங்குசாமிக்கு ஒரு படத்தை உருவாக்கி தரவும் சம்மதித்தார். ஆனால் இன்று வரை எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்து போடவில்லை கமல்.

இதனால்தான் பாபநாசம் படத்தைதடை போட்டு உள்ளனர் விநியோகஸ்தர்கள். படம் வெளிவருமா, வராதா என்று நாளை தெரியும் என்கிறார்கள் கோடம்பாக்கம் புள்ளிகள்.

ஹொலிவூட்டின் பிரபல நாயகி கிம் கர்தஷி யான். பைசல் சயீப் இயக்கவுள்ள For Adults Only படத்தில் கிம் கர்தஷி யான் நடிக்க அவரிடம் கேட்டுள்ளனர். தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளில் தயாராக இருக்கும் இப்படத்தில் தனுஷ் நடிக்க இருப்பதாக செய்திகள் வந்துள்ளது. இந்நிலையில், இதுபற்றி இயக்குனர் கூறுகையில், தனுஷ் சிறந்த நடிகர். இதில் இருவேறு கருத்து கிடையாது. ஆனால் For Adults Only படத்தில் நடிக்க கேட்டு அவரை அணுகவில்லை. கிம் கர்தஷியானை நடிக்க கேட்டு பேசப்பட்டது.

அநேகமாக அவர் கெஸ்ட் ரோலில் நடிக்க சம்மதிப்பார் என்று எண்ணுகிறோம். தமிழில் இப்படம் உருவாவதால் தமிழ் ஹீரோ ஒருவர் நடிக்கலாம். அவர் யார் என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. துபாயை சேர்ந்த ஆன்ட்ரியா டி சோஸா ஹீரோயினாக நடிக்க உள்ளார் என்றார்.

## ரஜினி இல்லைன்னா அஜித் - பிரபல இயக்குனர்



மலையாள சினிமாவில் பிரபலமான இயக்குனர் சித்திக். இவருடைய படங்களை மலையாள சினிமா எதிர்ப்பார்க்கிறதோ? இல்லையோ? மற்ற மொழிகளில் உள்ள நடிகர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் எதிர்ப்பார்க்கிறார்கள். ஏனென்றால் இவருடைய படங்களை ரீமேக் செய்வதில் அவ்வளவு ஆர்வம். கடந்த ஏப்ரலில் சித்திக் இயக்கத்தில் மம்முட்டி, நயன்தாரா நடிப்பில் வெளியான படம் பாஸ்கர் தி ராஸ்கல்.

இந்த படத்தின் ரீமேக் வியாபாராம் சூடு பிடிக்க, அக்ஷய் குமார், வெங்கடேஷ் ஏற்கெனவே அப்ளிகேஷன் போட்டுவிட்டு காத்துக்கொண்டிருக்கின்றனர். ரீமேக்கையும் தானே இயக்கும் முடிவில் இருக்கும் சித்திக், தமிழில் ரஜினி அல்லது அஜித் நடித்தால் தான் சரியானதாக இருக்கும் என்று கூறியுள்ளாராம்.

## காக்கா முட்டைக்காக அழுத பாட்டி



சிறிது நாட்களுக்கு முன்பு வெளியாகி திரையில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் தேசிய விருதும் பெற்ற படம் காக்கா முட்டை. இந்த படத்தில் பசங்களுக்கு பாட்டியாக வந்தவர் சாந்திமணி. இவர் 50 ஆண்டுகளுக்கும் மேலாக சினிமாவில் இருக்கின்றார்.

ஆனால் இதுவரை இவரது முகம் வெளியில் தெரியாமல் இருந்தது. இத்தனை வருடம் கழித்து இன்று தனக்கென ஒரு பெயர் வாங்கி தந்தது காக்கா முட்டை தான் என்று ஆனந்த கண்ணீர் விட ஆரம்பித்தார்.

## உறுதிபடுத்தப்பட்ட எந்திரன் 2



சூப்பர் ஸ்டார் நடிப்பில் பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கரின் இயக்கத்தில் உருவான எந்திரன் படம் மக்களிடையே இன்றும் மிகவும் பிடித்த படமாக உள்ளது. இப்படத்தின் இரண்டாம் பாகம் எப்போது தொடங்கப்படும் என்று ரஜினி ரசிகர்கள் காத்திருந்தனர், அதற்கு விடை இப்போது கிடைத்துள்ளது. எந்திரன் 2வுக்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும் ஷங்கர் அலுவலகத்தில் கதைக்கான Discussion வேலைகள் தற்போது நடந்து வருகிறதாம், இப்படத்துக்கான நடிகர்கள் தேர்வு, தயாரிப்பு நிறுவனம், பட பட்ஜெட் போன்ற வேலைகள் இன்னும் பேச்சு வார்த்தையில் உள்ளதாம்.

இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் யார் யார் நடிக்கப்போகின்றனர் என்று தெரியும் வரும் என்கிறார்கள் ஷங்கர் குழுவினர்.


## பிறந்த நாள் கொண்டாடிய நடிகை பூஜா



தமிழில் தல நடித்த அட்டகாசம் படம் மூலம் அறிமுகமானவர் பூஜா. அதன் பின் பல தமிழ் படங்களில் நடித்து பிரபலமானார், இவரது நடிப்பில் கடைசியாக வெளிவந்த விடியும் முன் படம் விமர்சகர்களிடைய மிகுந்த வரவேற்பை பெற்றது. தமிழ் திரைப்படங்களிலும் அவ்வப்போது நடித்து வரும் பூஜா சிங்கள திரைப்படத்துறையிலும் முன்னணி கதாநாயகியாக திகழ்கிறார்.

இந்நிலையில் தனது 34வது பிறந்த நாளை சிங்கள நண்பர்களுடன் செம்ம ரகளையாக கொண்டாடியுள்ளார். அதன் வீடியோ தற்போது வைரசாக பரவி வருகிறது.

## தயாரிப்பாளரால் கடும் அதிர்ச்சியில் விக்ரம்



சீயான் விக்ரம் பத்து எண்றதுக்குள்ள படப்பிடிப்பு முழுவதும் முடிவடையாமலே ஆனந்த் ஷங்கர் இயக்கும் அடுத்த படத்துக்கு ரெடியாகி விட்டார். இப்படத்துக்கான வேலைகள் அனைத்தும் முடிவடைந்து முதல்கட்டப் படப்பிடிப்புக்காக மலேசியாவுக்கு செல்ல இருந்தது படக்குழு. ஆனால் கடைசி நேரத்தில் அட்லியுடன் விஜய் இணையும் அடுத்த படத்தை தயாரிக்கும் கலைபுலி தாணு கொடுத்த புகாரால் இந்த பயணம் ரத்தானதாம்.

முதலில் கலைப்புலி தாணுவின் அண்ணன் தயாரிப்பில் தான் இந்த படம் துவங்க உள்ளதாக இருந்தது, ஆனால் இடைப்பட்ட நேரத்தில் சில பிரச்சினையால் இப்படம் ஐங்கரன் நிறுவனத்துக்கு கைமாறியது. தாணு தரப்பிலிருந்து தொழிலாளர்கள் சங்கம் உட்பட திரைப்பட சங்கங்களுக்கு ஒரு கடிதம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அந்தக்கடிதத்தில், எங்கள் நிறுவனத்தில் அரிமாநம்பி படத்தை இயக்கிய இயக்குநர் ஆனந்த்சங்கருக்கும் எங்களுக்கும் இடையில் சில சிக்கல்கள் இருக்கின்றன, அவற்றைச் சரிசெய்யாமல் அவர் அடுத்தபடத்தை இயக்கப்போகிறார். எனவே அவருக்கு நீங்கள் ஒத்துழைப்புக்கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருந்தார்களாம். இதை கேள்விப்பட்டு விக்ரம் மற்றும் படக்குழுவினர் பலத்த அதிர்ச்சியில் உள்ளனராம்.



# கவிதைப் பூங்கா



இலைகள் முகம்கழுவி
இன்னும் அழகாய்
சலசலத்துக்
கொண்டிருக்கின்றன

கூரை சொட்டிய
இடங்களில்
வரிசையாய் அழகழகாய்
சின்ன சின்ன குழிகள்
இலையின் நுனியில்
விழமறுத்து ஒருசில துளிகள்
ஊஞ்சலாடிக்கொண்டிருக்கின்றன

மண்புழுக்கள் ஊர்ந்த
வழித்தடங்கள்
கோடுகளாய்
கோலமிடப்பட்டுள்ளன
கரையான் கிளறும்
கோழிகளின் கால்களை
சுற்றி சுற்றி ஓடுகின்றன
குஞ்சுகள்

இரவெல்லாம் பெய்த மழை
ஓய்ந்திருக்கிறது
ஊரோ ஓய்வை மறந்து
சுறுசுறுப்பாய்
ஓடத்தொடங்குகிறது

## முயற்சி!

ஆண்டவன் ஆசீர்வதித்த
ஆறா முயற்சியது...!
அடுத்தடுத்திருப்பின்
ஒரு நாள் விடியும்
ஓராயிரம் கனவுகள்
நனவாகும் நன்நாள் வரும்
வாழ்வின் வசந்த காலம்
உனக்காய் காத்திருக்கும்
வெற்றியின் இரகசியம்
இதுவேயன்றோ..!
சோர்வை தொலைத்து
நிமிர்ந்து நில்!
நிம்மதி கிடைக்கும்
ஆண்டவன் செய்வானென்ற
அலட்சிய போக்கும் வேண்டாம்
எல்லாம் என்னால் முடியுமென்ற
அகங்காரமும் வேண்டாம் மனிதா!
முயற்சியுடன் பிரார்த்தனை செய்.

## இறப்பு

மகிழ்வில் திழைப்பவன்
வெறுப்பது இதையே!
துயரத்தில் இருப்பவன்
விரும்புவது இதையே!
ஆண்டவன் தீர்ப்பே வெல்லும்
பிறப்பு இறப்பிற்கு நடுவே
ஐயகோ..!!!
பேதமை ஏனப்பா இங்கே..?
வருகின்றோம் போகின்றோம்
நன்மை செய்யின் மகிழ்வாக!
எண்ணங்கள் உயர்வாக!
மன திண்ணமது வலுவாக!
கரமது வள்ளளதுவாக!
மனசது வெள்ளையாக!
வாழ்க்கையது இதுவெனின்..!!!
இறப்பது சுகமான சங்கீதம்

நீல வானில் நட்சத்திரங்களில்
தேடினேன்
நீந்தியோடும்
மேகங்களில் தேடினேன்!
கூவும் குயிலின் இசையில்
உன் குரலை தேடினேன் !
மலரும் மலர்களின்
சுகந்தத்தில் உன்னை
தேடினேன் !
தொட்டணைக்கும் தென்றலின்
இதமான அசைவில் தேடினேன்
மூங்கில் காற்றின்
சல சலப்பில் உன்னை
தேடினேன் !
கால்களை தழுவும்
கடல் அலையில்
தேடினேன்
விதைக்க போட்ட
விதையின் வளர்ச்சியில்
தேடினேன் !
எங்கெல்லாமோ தேடினேன்
என்னுள் வாழும்
உன்னை மறந்து !

## கானல்

கண்டதும் அவன் மெய்மறந்து
கனவுலகில் தான் சஞ்சரித்து
இதயத்துடிப்பது வேகமாகி
கைகள் பதற..!
கால்கள் அசைய..!
மெல்ல மதிலோடு சாய்ந்து
பலமாய் நிற்கையிலே...
அவள் அருகில் வந்தாள்!!!
அண்ணா வேலன் கோவில்?
அது எனக்காட்ட..!
ஆங்கே !
அவளிற்காய்
காத்திருந்தான் அவள் காதலன்

## இரக்கம்

இறைவன் கொடுத்த வரம்
ஈடிணை இல்லா வரம்
உலகை ஆழும் குணம்
உலகோர் பயன் கொள்ளுமிடம்
தவறா சரியா ..?
கேள்வி கேட்காவிடம்
மாமனிதர் உள்ளத்தில்
மாணிக்கமென பதித்த
உயர்ந்த குணம்
உலகின் உன்னத
மனிதம் வாழுமிடம்...

## என் கவிதைகள்

என்
கவிதைகள்
தட்டியெழுப்புகிறது
உன்னை
நித்திரையில்
இருந்து அல்ல
மன உறக்கத்தில்
இருந்து...

விழி
உறக்கம் கலைந்தால்
விடிந்திருக்கும்
பொழுது
உன்
மனஉறக்கம் கலைந்தால்
விடிந்திருக்கும்
வாழ்க்கை...

சோர்வு
தோல்விக்கான
குறுகிய
பாதை
முயற்சி
வெற்றிக்காண
நீண்ட பயணம்...

எழுச்சி
இல்லாத மனதில்
அடிக்க நிகழும்
துயரம்
நீ
மகிழ்ச்சிய அடைய
எழுச்சி தான் நல்ல
மருந்து...

பிளவுகள்
இருந்தால் சரிவுகள்
என்பது
நிச்சயம்
உன்
இலட்சியப் பாறையில்
வெடிப்புகள் வராமல்
பார்...

போதை
பொருள் பயன்படுத்தினால்
வாழ்க்கை பயிர்
நாசம்
ஆழம்
அறிந்தபிறகும்
நீ கால் வைப்பது
தவறு...


உன்
கனவுக்கூரையின்மேல்
தீவைக்க காத்திருக்கிறார்
பலர்
நீ
ஏமாந்து போகாதே
விழிப்பாக
இரு...

என்
கவிதைகள்
தட்டி எழுப்புகிறது
உன்னை
நித்திரையில்
இருந்து அல்ல
மன உறக்கத்தில்
இருந்து...

உயிரோவியன்



# புனைகதைப் புயல்



# முள்ளிடை முகிழ்த்த மலர்

**அன்னக்கிளி**

தொடர் -96

'கயஸ்' புறப்படத் தயாரானது. எல்லோரும் ஏறிக்கொண்டனர். முதலாவதாக வதனாவே ஏறியிருந்தாள். ஆனாலும் அவள் ஒருத்தரோடும்பேசாது அமைதியாக இருந்தாள். வான் நகர்ந்தது, அவளது மனது ஏதோ கன மாக இருந்தது. அவனைப்பிரிந்து வெட்டைக்கடல் தாண்டி வந்தபோதும், அவ்னது பிரிவை எண்ணி அடிக்கடி துடித்த போதும் ஏன் அவன் இறந்தது பற்றிய செய்தியை கேட்டபோது கூட மனது இப்படி இருந்ததில்லை. ஆனால் இன்று ஏதோ அவளுக்கு தவிப்பாக இருந்தது. அவன் இறந்தது பற்றி அறிந்து தனது பிள்ளைக்காக அடுத்தகட்டவாழ்வு பற்றி சிந்திக்க தொடங்கியிருந்தபோதும்இன்றைய சடங்குகள் அவளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தின.

வாகனம் ஓடியதே தெரியவில்லை. வீடு வந்து அனைவரும் இறங்கும் போது தான் அவளுக்கு புரிந்தது. தலை விண்விண் என்று இருந்தது, எழுந்து நடக்கவே முடியாத நிலையாக இருந்தது. அருகில் இருந்த ஒருவரின் கையைப்பிடித்து இறங்கினாள். பிடித்தகையைவிடாது இறுகப் பற்றியிருந்தாள். அப்படியே உள்ளே வரை நடந்து சென்றாள். கதிரை ஒன்றின்மீது அமர்ந்து கொண்டாள். அவளது செயற்பாட்டைக்கண்டு கொண்ட மாமியார் அவளை அப்படியே விட்டுவிடாமல் அடுத்த கட்ட வேலைகளை தொடங்குவதற்காக,



"பிள்ளை கெரியாய் குளிச்சிட்டு வா... நிறைய வேலை கிடக்கு..."

என்று வேகப்படுத்தினார். இரண்டாம் முறையும் கூறிப்பார்த்தார். அவள் அசைந்த பாடாக காணவில்லை. தானாகவே சென்று வீட்டினுள் தோய்க்கப்பட வேண்டிய உடைகளை அள்ளி வந்து அவளருகில் போட்டு,

"இதுகளை தோய்ச்சுப் போட்டு குளிபிள்ளை...."

மாமியார் அப்படிச்செய்ததும் எழுந்து கொண்டாள்.

"ஓம்மாமி... மாத்திப்போட... உடுப்பெடுத்துக்கொண்டு போறன்."

"அது காலையிலை குளிச்சிட்டுபோட்ட உடுப்புகள் கிடக்குது. அதைபோடு. கோயிலடியிலையிருந்து தீர்த்தம் கொண்டு வந்திருக்கு. குளிச்சிட்டு வந்து கொஞ்சமாய் குடி பிள்ளை."

மாமியாரின் கதை கேட்டு குளித்து விட்டு வந்தாள். இப்போது உடலும் மனமும் கொஞ்சம் இலேசாக இருந்தது. இதற்கிடையில் ஏற்கனவே குளித்துவிட்டு வந்திருந்த மாமியார் ரவிக்குமாரின் படத்தை கதிரை ஒன்றில் வைத்து முன்னால் செம்பில் தண்ணீரும் வைத்து விளக்கும் வைத்திருந்தார். சாம்பிராணியின் இனிய வாசனை அவளுக்குக் கொடூரமாக இருந்தது. விளக்குக் கூட தனக்கு துரோகமிழைத்துவிட்டதாகத் தோன்றியது.

"பிள்ளை படத்துக்கு பூவைச்சிட்டு வா... சுடுதண்ணி குடிக்க..."

மாமியார் கூறியது காதில்விழ அதன்படியே செய்தாள். கிச்சின் கொட்டிலுக்குள் சென்றாள். அங்கு பொருட்கள் பரவிக்கிடந்தன. அதைப்பாக்க கடுமையான வேலை கள் நடந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது.

"பிள்ளை உங்கை அடுப்பு வேலை செய்ய இடங்காணாது. இஞ்சாலை வா"

அங்கு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அயல் வீட்டுக்காற அன்ரி அழைத்தார். அங்கே பலர் பலகாரங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவளுக்கு தேனீர் வழங்கப்பட்டது. அவளுக்கு சீனி குறைவாக இருக்க வேண்டும் இதில் அதிகமாக இருந்தது. என்னசெய்வது என்று எதுவும் பேசாது குடித்து முடித்தாள். பின்னர் அங்கேயே ஒருகதிரையில் அமர்ந்து கொண்டாள். படையலுக்கு என்று எல்லாவிதமான பலகாரங்களையும் செய்வதற்கு ராம் ஏற்பாடு செய்திருந்தான். நான்கைந்து மணித்தியாலங்கள் கழித்து ஆண்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களில் அயலவர்கள் தாம் குளித்துவிட்டு வருவதாக சென்றனர். வதனாவின் தந்தையும் வீட்டில் போய் குளித்துவிட்டு வருவதாக புறப்பட்டார்.

"இஞ்சாருங்கோப்பா.... மாடு கண்டுகளுக்கு பாத்து தண்ணி வைச்சிட்டுவாங்கோ. வைக்கல்லையும் அள்ளி போட்டுட்டு வாங்கோ."

"இம்....இம்... இரவுக்கும் இஞ்சை தானே நிக்க வேணும்... அதுக்கேத்தமாதிரி பாத்திட்டுவாறன்.. உனக்கேதாவது எடுத்து வாறதே..."

"இம் இல்லையப்பா இரவுக்கு ஒருக்கால் வீட்டை ஓடிப்போட்டுத்தான் வரவேணும். நாளைக்குஉடுத்தஉடுப்புகள்எடுக்க வேணும். அது ஒரு இடையாப்பாத்து வேலையள் ஒதுங்க விட்டு போவம். இப்ப நீங்க போட்டு வாங்க."

இரவும் ஒருத்தரும் நித்திரை கொள்ளவில்லை. உறவுக்காரர்கள் நண்பர்கள்என கிட்டத்தட்ட நாநூறு பேருக்கு காட் கொடுத்திருந்தான்.

பெரும்பாலும் எல்லோரும் கிட்ட உள்ளவர்கள் என்பதால் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் தொகையான மரக்கறிகளை வெட்டி ஆயத்தம் செய்தனர். தமிழுக்கோ எதனையும் புரிந்து கொள்ளமுடியவில்லை. மாமன் மாருடன் செல்லம் கொஞ்சுவதும் அங்குமிங்கும் ஓடித்திரிவதுமாக இருந்தாள்.

"பிள்ளை தமிழை கூட்டிக்கொண்டுபோய் படுக் கவை..."
தாயார் கூறினார்.

"இரண்டுதரம் கொண்டு போய் படுக்க விட்டனான் அவள் ஓடிவந்திட்டாள்."

"நாங்கள் இப்பிடி இருந்து வேலைசெய்ய அவள் படுக்கமாட்டாள்தான். நீயும் போய் படு. காலமை வெள்ளன எழும்ப வேணும்."

தாய் வற்புறுத்திக்கூற மற்றவர்களும் சேர்ந்து கூறினர். தமிழை தூக்கிக் கொண்டு வழமையாக படுக்குமிடத்திற்குச் சென்றாள். ஏற்கனவே தர்சா பாய்விரித்து தலையணைகளும் போட்டு வைத்திருந்தாள். பிள்ளையை படுத்தினாள். அவளோ படுக்க மனமின்றி

"அம்மா வெளீலபோவம்"

என அடம் பிடித்தாள்.

"அம்மா கதை சொல்லுறன் கேக்கிறியளா....?"

"என்ன கதை...."
"ஆமைக்கதை...."

"அது வேண்டாம்... வேறை..."
சினுங்கினாள்.

புதிதாக மிருகங்களின் பெயர்களை வைத்து எதாவது இயற்றிக்கூற வேண்டும். அதில் இடைக்கிடை குட்டித்தம்பி, பிள்ளையமாதிரி அக்கா, போன்ற விடயங்கள் இருக்கவேண்டும் அதுதான் தமிழுக்கு பிடித்த கதை. கதை கேட்டவாறு உறங்கிப்போனாள். வதனாவுக்கும் நித்திரை தூக்கிய டித்தது. பிள்ளை நித்திரையான பின்னர் வெளியில்போய் வேலைசெய்ய வேண்டும் என நினைத்தவள். தன்னை அறியா மலே அசந்து தூங்கிப்போனாள். மறுநாள் விடிந்தும் யாரும் அவளை எழுப்பவில்லை. தமிழ் எழும்பி வெளியில்சென்று அப்பம்மாவிடம் தேனீர் குடித்துவிட்டு அங்குமிங்கும் திரிந்து வேடிக்கை பார் த்துக்கொண்டிருந்தாள். நன்றாக விடிந்தும் அவள் எழும்பாததால் தாயார் எழுப்பிட சென்றாள்.

"வேண்டாம் அலுப்புத் தானே படுக்கட்டும்... ஆறுதலாய் எழுப்புவம்."
என்று மாமியார் தடுத்தார்.

நீண்டநேரத்தின் பின் கண்விழித்த வதனா அவசர அவசரமாக எழுந்தாள்.

**அவள் வருவாள்...**



# ஆன்மீக உலகம்



## விவேகானந்தரின் சிந்தனைகள்

கைகள் இருப்பது பிறருக்கு உதவிசெய்யத் தான். பட்டினியாய்க் கிடந்தாலும் கடைசிப் பருக்கையையும் பிறருக்கு கொடுப்பது தான் நல்லது. கொடுப்பவன் முழுமை பெற்று முடிவில் கடவுளாகிறான்.

ஒருவருக்கு உதவி செய்ய எண்ணி, யாருடைய கை முன்னே நீளுகிறதோ, அவனே மக்களில் சிறந்தவன். பரந்த இந்த உலகத்தில், கிராமம் கிராமமாகச் சென்று மனிதகுலத்திற்கு நன்மை செய்வதை கடமையாகக் கொள்ளுங்கள். மற்றவர்களின் நன்மைக்காக நரகத்திற்குக் கூடச் செல்ல தயாராகுங்கள். தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அலட்டிக்கொள்வதில் ஆற்றலைச் சிதறவிடாமல் அமைதியுடனும், ஆண்மையுடனும் ஆக்கப்பூர்வமான கடமைகளில் அக்கறை காட்டுங்கள்.

சேவை செய்யும் வாய்ப்பு எல்லாருக்கும் கிடைப்பதில்லை. தன் குழந்தைகளில் யாராவது ஒருவருக்கு உதவி செய்யும் வாய்ப்பை கடவுள் அளித்தால் அதன் மூலம் நீங்கள் பாக்கியம் பெற்றவராகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

நல்லவர்கள் உலகில் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனித குலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை உலக வரலாறு எங்கும் காணமுடியும். பாமரர்களுக்கு கல்வியையும், மனதிற்கு தைரியம் மிக்க சொற்களையும் வழங்குவது தர்மங்களில் சிறந்த தர்மமாகும். ஒருவன் கல்வி பெறுவதால் அவனுடைய குடும்பமே முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்கும்.

உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவி யும் உனக்குள்ளே குடிகொண்டு இருக்கின்றன.

யாருடைய நம்பிக்கையையும் கலைக்க முயலாதீர்கள். முடியுமானால் அந்த மனிதனுக்கு அவன் கொண்ட நம்பிக்கைக்கும்மேலாக இன்னொன்றைக் கொடுங்கள். நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சூட்சுமத்தன்மையை அடைகிறது. மனிதன் தன் வாழ்க்கையைத் தானே உருவாக்கிக்கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக்கொள்ளும் விதிகளைத்தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.

எழுந்துதைரியமாகநின்றால், உன்விதியை நீயே நிர்ணயிப்பாய். கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பர், அன்பைக் கொள்ளாமல் பொருளை மட்டும் கொள்ளும் விலைமகள் போன்றவர் ஆவார். அவருடைய நட்பினை ஏற்றுக் கொள்ளாதீர்கள். நம்மைப்பற்றிச் சிந்திக்காமல், மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைத்தால் கூடப்போதுமானது. இந்தச்சிந்தனை சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குப் படிப்படியாகத் தரும்.

## நபிகளின் பொன்மொழிகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்கள் வளைந்த எலும்பு போன்றவர்கள். அதனை நிமிர்த்த முயன்றால் அதனை உடைத்து விடுவாய். அந்த வளைவு இருக்கும் நிலையிலேயே அவளைவிட்டு விட்டால் அவளிடம் இன்பம் பெறுவாய் என்று நபிகள் நாயகம் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி *3331, 5184, 5186*

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தன் அன்பளிப்பைத்திரும்பப் பெறுபவன் வாந்தியெடுத்த பிறகு, அதை மீண்டும் தின்கின்ற நாயைப்போன்றவன் ஆவான். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல் : புகாரி *(2589)*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவரது வாசலில் ஆறு ஒன்று (ஓடிக்கொண்டு) இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து தடவை குளிக்கின்றார் அவரது மேனியிலுள்ள அழுக்குகளில் எதுவும் எஞ்சியிருக்குமா? எனக் கூறுங்கள்' என்று நபித்தோழர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'அவரது அழுக்குகளில் சிறிதளவும் எஞ்சியிராது' என நபித்தோழர்கள் கூறினர். 'இது ஐவேளைத் தொழுகைகளின் உவமையாகும். இதன் மூலம் அல்லாஹ் (சிறிய) பாவங்களை அகற்றுகிறான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ/ஹுரைரா (ரலி) நூல்கள்: புகாரீ *528*, முஸ்லிம் *1071*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கஞ்சனுக்கும் தர்மம் செய்பவனுக்கும் உதாரணமாவது, மார்பிலிருந்து கழுத்து வரை இரும்பாலான அங்கிகள் அணிந்த இரு மனிதர்களைப் போன்றதாகும். தர்மம் செய்பவர் தர்மம் செய்யும் போதெல்லாம் அவருடைய அங்கி விரிந்து விரல்களை மறைத்துக் கால்களை மூடி, தரையில் இழுபடும் அளவுக்கு விரிவடையும். கஞ்சன் செலவு செய்யக்கூடாது என்று எண்ணும் போதெல்லாம் அவ்வங்கியின் ஒவ்வொரு வளையமும் அதற்குரிய இடத்தை நெருக்கும். அவன் அதை விரிக்க முயன்றாலும் அது விரியாது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அஹுரைரா (ரலி), நூல்: புகாரி *1443, 1444, 5797*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது நிலையும் எனக்கு முன்பிருந்த இறைத்தூதர்கள் நிலையும் ஒரு வீட்டைக்கட்டி அதை அழகாக அலங்கரித்து, ஒரு மூலையில் ஒரு செங்கல் அளவிற்குள்ள இடத்தை மட்டும் விட்டுவிட்ட ஒரு மனிதரின் நிலை போன்றதாகும். மக்கள் அதைச்சுற்றிப் பார்த்து விட்டு ஆச்சரியமடைந்து, இந்தச் செங்கல் (இங்கே) வைக்கப்பட்டிருக்கக் கூடாதா? என்று கேட்கலானார்கள். நான் தான் அந்தச் செங்கல். மேலும், நான் தான் இறைத் தூதர்களில் இறுதியானவன். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி *3535*

## ஏசாயா

உங்கள் மாதப்பிறப்புகளையும் உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது. அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவைகளைச் சுமந்து இளைத்துப்போனேன்.

நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன். உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது.

உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள். உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்.

நன்மைசெய்யப் படியுங்கள். நியாயத்தைத் தேடுங்கள். ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும் விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.

வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.

நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புரிந்தேன்.

மாட்டோம் என்று எதிர்த்துநிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள். கர்த்தரின் வாய் இதைச் சொல்கிறது.

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அரச துரப்பினரும் கடமையின் நிமித்தமின்றி கருத்தளவில் இலங்கையை மாறிமாறி ஆண்டுகொண்டிருக்கும் ஐ.தே.க அரசின் மீதும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசின் மீதும் அபிமானமற்றவர்களுமாக விளங்கியமையும் கருத்தளவில் அவர்களோடும் ஒத்த மனோபாவத்தைக்கொண்ட இராணுவத்தினரோடும் ஏனைய துருப்புக்களோடும் இணைந்த களத்தக்கவைப்பு வடக்கில் உருவாக்கப்பட்டது. இக்களத்தக்கவைப்பு ஆயுதக்குழுக்களின் பலங்களில் முன்னிலை வகித்ததாகக்கொள்ள முடியும்.

இக்குழுக்கள் தமிழ் ஈழம் என்னும் குறிக்கோளின்பாற்பட்டு அதை உள்ளடக்கியதாகவே தமது அமைப்புக்களின் பெயர்களையுங் கொண்டிருந்தன. இவற்றில் TELO என்பது தமிழ் ஈழ விடுதலை அமைப்பு எனவும், PLOT என்பது தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகம் எனவும், EPRLF என்பது ஈழம் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எனவும், EROS என்பது ஈழம் புரட்சிகர விடுதலை முன்னணி எனவும், ENDLF என்பது ஈழம்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியெனவும், தமது பெயர்களுக்குள் தமிழ் ஈழம் என்பதையே உள்ளடக்கி நின்று இராணுவத்தினரோடு இணைந்து வேலை செய்தமையால் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களால் கருத்தற்ற கட்சிகள் என வர்ணிக்கப்பட்டன. இக்கூற்றானது சரியானதாகவிருந்தபோதும் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பிலுமுள்ள தனிநபர் அரசியல் உள்ளக்கிடக்கை சார்ந்தும் குழு ரீதியிலான மனோவுணர்வின் பாற்பட்டும் வடக்குக்கிழக்கின் இராணுவ இணைவில் தமிழ் மக்களின் எதிர்காலந்தொடர்பில் வேதனையை உருவாக்கக்கூடிய அர்த்தம் பொதிந்திருந்தமையும் நோக்கற்பாலது.

இவ்வர்த்தத்தின் பாற்பட்ட சிங்கள ஏழ்மை அலையின் ஆத்ம துடிப்பும் தமிழ் வறிய அலையின் ஆத்ம துடிப்பும் இணைந்து ஆயுதப்போராட்டம் பலவீனப்பட்டது. நல்லோர்கள் அனைவரையும் மிகவும் துன்புறுத்திவந்த நிலையிலுங்கூட வடக்கு கிழக்கின் ஏழ்மையின் மீதும், புறக்கணிப்புக்களின் மீதும் இவ்வாயுதக்குழுக்கள் கரிசனைகாட்டி உள்ளூர் மட்டத்தில் பல்வேறு சேவைகளை ஆற்ற முன்வந்தமை மட்டுமல்ல, ஆற்றவுஞ் செய்திருக்கின்றார்கள்.

எடுத்துக்காட்டாக வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்குதல், நிலமற்றவர்களுக்குக் காணி வழங்குதல், வேலைவாய்ப்பற்ற இளையோரைச் சுய முயற்சிகளில் ஈடுபடுத்தல், வறிய நிலையில் வாழ்ந்துகொண்டிருந்த குடும்பத்தலைவிகளுக்குச் சுய முயற்சிகளுக்கான உதவிகளை வழங்குதல் ஆகியவை உள்ளூர் மட்டங்களில் மேற்கொண்டமை இக்குழுக்களுக்குள் பொதுவாகக் கிராமிய மட்டத்திலும் குறிப்பாகப் பின்தங்கிய கிராமிய மட்டத்திலும் ஒரு பலத்தைத் தோற்றுவித்தும் இருந்தது.


இவ்வாறாக வடக்கின் ஆயுதக்குழுக்களின் பலங்களும், பலவீனங்களும் பல்வேறு முரண்பாடான அரசியல் எண்ணோட்டங்களையும் கொண்டிருந்தாலும் ஏனைய ஆயுதக் குழுக்களை மேலோங்கி தமிழீழ விடுதலைப்புலிகளுடைய பலம் சிறந்துவிளங்கிக்கொண்டிருக்கிறது. இதனையே இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேச ரீதியாகவும், நாடளாவிய ரீதியாகவும் தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற கோட்பாடுகளுடன் தமிழ்மக்களுடைய வரலாற்று அரசியற்ப்போர்முறை தொடர்கிறது. பொருளியல் தேவைகளினாலும், பிரதேச சமூகப் பிளவுகளினாலும் நிர்ணயிக்கப் பட்டிருந்தமையை நாம் கற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது.

07ஆம் பக்கத் தொடர்ச்சி...


இராணுவத்துடனான ஆயுததாரிகள் சிலரின் இணைவால் இராணுவம் விடுதலைப்புலிகள் கைப்பற்றி வைத்திருந்த யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் உட்புகுந்து விடுதலைப்புலிகளை வெளியேற்றித் தாம் அம் மாவட்டத்தைக் கைப்பற்றியதன் விளைவாக குடாநாட்டு மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்தமை தெரிந்ததே. விடுதலைப்புலிகள் அமைப்பில் நீண்டகாலமாக மிகவும் விசுவாசத்துடனும், பற்றுடனும் பணியாற்றி வந்த கருணா அவர்கள் அவ்அமைப்பிலிருந்து வெளியேறிச் சென்றமைக்கு அன்று இராசதுரை அவர்கள் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகிச் சென்றமைக்கான வடக்கின் வழமையான பிரதேச ரீதியிலான புறக்கணிப்புக் காரணமாக இருக்கின்றமையெனக் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணத்தை இழந்த விடுதலைப்புலிகள் சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் போது கிளிநொச்சியையும் இழந்து நின்றமையும், மீண்டும கிளிநொச்சியை கைப்பற்றியமையும் அதன்பின் தொடர்ச்சியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தமையும் இதன்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நிழல் ஆட்சியை மேற்கொண்டு வந்த புலிகள் அமைப்பினர் தமது நிர்வாக அலகுகளில் பொறுப்பாளர் நியமனங்களை வழங்கும்போதும், ஏனைய பிரதான விடயங்களிலும் அமைதி வழி ஜனநாயக நீரோட்டத்திலிருந்த பிரதேச ரீதியான துவேசம், புறக்கணிப்பு என்பவற்றை மேற்கொண்டு இருப்பார்கள் என எண்ணுவதற்கு ஏது நிலையுண்டு. இதன் காரணமாகக் கருணா அவர்களும் அவருடைய சகாக்களான கிழக்கிலங்கை முக்கியஸ்தர்களும், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து அதிருப்தி அடைந்து தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்னும் அமைப்பைத் தோற்றுவித்திருப்பார்கள் என எண்ணுவதில் வடக்குக் கிழக்கின் இயல்பான அரசியல் நகர்வின் கடந்தகாலப் பின்னணியின் ஆதாரம் வலுவான இடத்தை வகிக்கின்றது.

எனவே கிழக்கு மாகாண அரசியலும், அதன் பின்னணியும் வடக்குத் தலைமையோடும். இஸ்லாமிய உணர்வுகளோடும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதே உண்மையாகும்.



# அறிவியல் உலகம்




## Ultra Fibre Optic தொழில்நுட்பத்தில் மின்னல் வேக இணைய இணைப்பு




ஐக்கிய இராச்சியத்தில் தொலைபேசி வலையமைப்பு சேவையை வழங்கிவரும் Virgin Media நிறுவனம் 152 Mbps வேகம் கொண்ட இணைய இணைப்பினை மான்செஸ்டர் நகரில் ஏற்படுத்தியிருப்பது அறிந்ததே. இந்நிறுவனத்தைத் தொடர்ந்து TalkTalk நிறுவனம் Ultra Fibre Optic தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி 940Mbps வேகம் கொண்ட இணைய இணைப்பினை ஐக்கிய இராச்சியத்தின் York பகுதியில் ஏற்படுத்தியுள்ளது.

இவ்இணைப்பானது Virgin Media நிறுவனத்தினால் வழங்கப்பட்டுவரும் இணைய இணைப்பு வேகத்தின் 6 மடங்கு வேகம் உடையதாகும். இதேவேளை இப் புதிய இணைய இணைப்பிற்கு புதிய கட்டணங்களையும் அந்நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.


## நீரிழிவு நோயாளிகளுக்கு கைகொடுக்கும் புதிய கண்டுபிடிப்பு



நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறித்த கால இடைவெளியில் இன்சுலின் ஊசி போடப்படுவது அவசியமாகும். எனினும் அவசர தேவைகள் மற்றும் ஊசிகள் கிடைக்காதவிடத்து உடனடியாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் Smart Patch எனும் புதிய இன்சுலின் பட்டி ஒன்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

4 சென்ரி மீற்றர்கள் நீளமான இந்த பட்டியில் மிகவும் நுண்ணிய ஊசிகள் காணப்படுவதுடன் இவற்றினூடாகவே இன்சுலின் செலுத்தப்படுகின்றது. மேலும் இவற்றில் குருதியில் உள்ள குளுக்கோசின் மட்டத்தை அறிந்துகொள்வதற்கு விசேட சென்சரும் பொருத்தப்பட்டுள்ளது. இச் சென்சர் குருதியிலுள்ள குளுக்கோசின் மட்டம் மிகவும் உயர்வாக காணப்படுகின்றது என தெரிவித்தால் இன்சுலின் ஆனது தானாகவே வெளியேறு குருதியில் கலக்கும் வகையில் Smart Patch வடிவமைக்கப்பட்டுள்ளது.

## Dropbox புதிய மைல் கல்லை எட்டியது




ஒன்லைன் சேமிப்பு வசதியினை வழங்கிவரும் பிரபல்யமான நிறுவனங்களுள் ஒன்றான Drop box ஆனது தற்போது 400 மில்லியன் பயனர்களை எட்டியுள்ளது. கடந்த வருடம் மே மாதத்தில் 300 மில்லியன் பயனர்களைக் கொண்டிருந்த Dropbox ஒரு வருடம் எனும் குறுகிய காலத்தினுள் மேலும் 100 மில்லியன் பயனர்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இதில் 100,000 இற்கும் அதிகமானவர்கள் வியாபார நோக்கத்துடன் இச் சேவையினைப் பயன்படுத்துபவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு தனது சேவையை வழங்கிவரும் Dropbox ஆனது 2008 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் அன்ரோயிட் சாதனங்களுக்கான புதிய Dropbox அப்பிளிக்கேஷனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## முகப்பருக்களை ஏற்படுத்தும் விட்டமின்

உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமான விட்டமின்களில் ஒன்றான B12 ஆனது முகப்பருக்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைகின்றது என அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இறைச்சி வகைகள் மற்றும் பாலில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் என்பவற்றில் காணப்படும் இந்த விட்டமின் ஆனது மூளையின் சிறந்த செயற்பாட்டிற்கு உதவுகின்றது.

இதேவேளை 11 தொடக்கம் 30 வயதிற்கு உட்பட்ட இளம்வயதினரில் முகப்பருக்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறான முகப்பருக்கள் வருவதை தடை செய்யவோ அல்லது முற்றாக நிவாரணம் வழங்குவதற்கான முறைகளையோ இதுவரை விஞ்ஞானிகள் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## வாழைக்காயின் மகத்துவங்கள்



பல்வேறு சத்துக்கள் அடங்கியுள்ள வாழைக்காயை கொண்டு விதவிதமான உணவுகள் தயாரிக்கலாம். வாயுத்தொல்லை, வயிற்றுப்புண் உள்ளவர்களுக்கு நிரந்தர தீர்வு தரும். வாழைக்காயில் உப்புச்சத்து குறைவாகவும், பொட்டாசியம் அதிகமாகவும் உள்ளதால், இது ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைக்கக்கூடியது. இதில் உள்ள நார்ச்சத்து செரிமானத்திற்கு உதவுகிறது. மாவுச்சத்து அதிகம் இருப்பதால், வாழைக்காய் சிறிதளவு எடுத்துக்கொண்டாலே உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்கும். 90 நிமிட உடற்பயிற்சிக்குப் பிறகு தேவைப்படுகிற ஆற்றலை 2 வாழைப்பழங்களின் மூலம் பெற்றுவிட முடியும்.

வாழைப்பழத்தில் இரும்புச்சத்து அதிகமுள்ளது. ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கச்செய்து ரத்தசோகையை விரட்டக்கூடியது. அப்பிளைவிட 4 மடங்கு அதிக புரதம், 2 மடங்கு கார்போஹைட்ரேட், 3 மடங்கு அதிக பொஸ்பரஸ், 5 மடங்கு அதிகமான வட்டமின் ஏ மற்றும் இரும்புச்சத்து, 2 மடங்கு அதிகமான வட்டமின் மற்றும் தாதுச்சத்துகளைக் கொண்டது வாழைப்பழம்.


## தேனில் தயாராகும் கார்பன் நனோ துணிக்கைகள்



மருத்துவ உலகில் காலத்திற்குக் காலம் புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருக்கின்றன. கார்பன் நனோ துணிக்கைகளைக் கொண்டு பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் தற்போது தேன் மற்றும் நுண் அலைகளைக் (Micro Wave) கொண்டு இந்த கார்பன் நனோ துணிக்கைகளை உருவாக்க முடியும் என அமெரிக்காவிலுள்ள Illinois பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு உருவாக்கப்படும் நனோ துணிக்கைகள் 8 நனோ மீற்றர்களை விடவும் குறைந்த அளவுடையதாக காணப்படுகின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை உடலின் எந்த பாகத்திற்கும் செலுத்தக்கூடியதாக இருக்கும் இந்த நனோ துணிக்கைகள் மூலம் எதிர்காலத்தில் மேலும் பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அல்ஸீமர் நோயாளிகளைக் கண்காணிக்க அப்பிளிக்கேஷன்



அல்ஸீமர் நோய் என்பது தன்னை அறியாது, நிலை மறந்து பயணிப்பதாகும். இவ்வாறு தன்னை மறந்து பயணிக்கும் நோயாளி தொடர்பில் தகவல் தெரிவிக்கக்கூடிய சாதனம் ஒன்றினை 16 வயதான அமெரிக்காவைச் சேர்ந்த உயர் கல்லூரி மாணவனான Kenneth Shinozuka என்பவர் உருவாக்கியுள்ளார். தனது பாட்டனாரும் இதே நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களே இச் சாதனத்தை உருவாக்கத் தூண்டியதாக குறித்த மாணவன் தெரிவித்துள்ளான்.

Safe Wander எனும் இச்சாதனமானது சிறிய நாணயத்தின் அளவை ஒத்ததாக இருப்பதுடன், அதன் அடிப்பகுதியில் சென்சர் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இதனை நோயாளியின் பாதத்தின் அடிப்பகுதியில் அல்லது காலுறையினுள் பொருத்துவதன் மூலம் அவரின் அசைவுகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## மொபைல் சாதன விற்பனையில் கொடிகட்டிப் பறக்கும் Huawei



சிறந்த மொபைல் சாதனங்களை வடிவமைத்து அறிமுகம் செய்துவரும் Huawei நிறுவனமானது இந்த வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் 50 மில்லியன் மொபைல் சாதனங்களை விற்பனை செய்துள்ளது. சீன மொபைல் சாதன வடிவமைப்பு நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட அதி உச்ச விற்பனையாக இது கருதப்படுகின்றது.

இதேவேளை கடந்த வருடத்தின் முதல் காலாண்டுப்பகுதியில் 34.27 மில்லியன் மொபைல் சாதனங்களே இந்த நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்டிருந்தன. மேலும் இவ் வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் மொத்தமாக 6.9 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மொபைல் சாதனங்களை விற்பனை செய்துள்ளதுடன் புதிய வரவாக Huawei P8 Max எனும் ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது.

## இறைச்சி சாப்பிடுவதை நிறுத்தினால் ஏற்படும் மாற்றங்கள்



சைவ உணவுகளை விட அசைவ உணவுகளை விரும்பி சாப்பிடுபவர்களே ஏராளம்.

வாரத்தில்இருமுறைமாமிசம்சாப்பிட்டால் பரவாயில்லை, வாரத்தில் அனைத்து நாட்களிலும் சாப்பிடுபவர்களை கட்டுக்குள் கொண்டுவருவது என்பது கொஞ்சம் கடினமான விடயம். ஆனால், நாம் எடுத்துக்கொள்ளும் உணவுகளை வைத்து நமது ஆரோக்கியம் மேம்படும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஏனெனில், ஆரோக்கிய குறைபாட்டால் மருத்துவர்களை அணுகும்போது அவர்கள் தவிர்க்க அறிவுறுத்தும் முதல் உணவுகளில் இடம்பெறுவது சிக்கன், மட்டன், மாட்டிறைச்சிகள் தான். அவ்வாறு இறைச்சியை சாப்பிடுவதை நீங்கள் நிறுத்துவதன் மூலம் உங்கள் உடலில் புதுவித மாற்றங்களை காணலாம். இறைச்சி சாப்பிடுவதை நிறுத்தும்போது முதலில் ஏற்படும் மாற்றம் உங்கள் எடை குறைவதுதான். குறைந்தது 3 அல்லது 4 கிலோ வரை எடை குறைய வாய்ப்புள்ளது.

சைவம் மற்றும் அசைவ உணவுகளை சாப்பிடுபவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், சைவம் சாப்பிடுபவர்களுக்கு 24% இதய நோய்களின் பாதிப்புகள் குறைவாக உள்ளது என தெரியவந்துள்ளது. தசைகளின் வலிமைக்கு புரதச்சத்து மிகவும் அவசியம், எனவே இறைச்சி சாப்பிடுவதை நிறுத்தும்போது புரதச்சத்து குறைய வாய்ப்புள்ளது, ஆகவே புரதச்சத்து நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இறைச்சி சாப்பிட்டால் உடல் சூடு அதிகமாக இருக்கும், எனவே நீங்கள் இந்த உணவை தவிர்ப்பதன் மூலம் உங்கள் உடல் சூடு குறையும். செரிமானப்பிரச்சினைகள் சரியாகும். இறைச்சியை கைவிட்டால் அதற்கேற்றவாறு சத்துள்ள காய்கறிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

## iOS 9 பீட்டா 2 பதிப்பு அறிமுகம்

தனது மொபைல் சாதனங்களுக்கான iPhone 6 iOS 9 பீட்டா 1 பதிப்பினை அண்மையில் அப்பிள் நிறுவனம் வெளியிட்டிருந்தது. சில புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டிருந்த இப்பதிப்பில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு தற்போது iOS 9 பீட்டா 2 பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை இதன் ஒரிஜினல் பதிப்பை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அறிமுகம் செய்வதற்கு அப்பிள் நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

# விளையாட்டு உலகம்

## கிரிக்கெட் வாழ்க்கையில் மெக்ராத் வியந்து பார்த்த வீரர்கள்




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத், தனது கிரிக்கெட் வாழ்க்கையில் வியந்துபார்த்த 5 வீரர்களை வரிசைப்படுத்தியுள்ளார். சச்சின் டெண்டுல்கர் உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்டக்காரர். 24 ஆண்டுகள் கிரிக்கெட்டில் நிலைத்துநின்று பல சாதனைகளைப் படைத்தவர். எனது பந்துவீச்சை அடித்து நொறுக்குவதில் திறமை படைத்தவர்.

பிரைன் லாரா எனது சிறப்பான பந்தையும் மோசமானதாக மாற்றிவிடுவார். தேவை இல்லாமல் பல ஷொட்களை ஆடி வியக்க வைப்பார். இவரை வீழ்த்த நான் சில உக்திகளைப் பயன்படுத்துவேன். ஆனாலும் இவரைப்புரிந்துகொள்ள முடியாது.

ராகுல் டிராவிட் என்னை பிரமிக்க வைத்த வீரர். நாள் முழுவதும் களத்தில் அசராமல் நிற்பார். இவரை களத்தில் நிற்க வைத்துவிட்டால் அவ்வளவு தான். இவரை வீழ்த்துவது சுலபமான காரியம் இல்லை. இவரிடம் ஏதாவது பலவீனம் இருக்கிறதா? என்று தேடுவேன். இவர் எனது மதிப்புமிக்க வீரர்.

நான் ரிக்கி பொண்டிங் உடன் அதிகமாக ஆடியுள்ளேன். அணித்தலைவர் பொறுப்பு என்று இருந்தாலும், களத்தில் அதிரடி காட்டக்கூடியவர். இவரிடம்தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும். இவர் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் சச்சின் யாரும் எட்ட முடியாத உச்சத்திற்கு சென்றுவிட்டார். ஸ்டீவ் வாஹ் சவாலான காரியங்களை செய்யக்கூடியவர். இக்கட்டான நிலைமைகளில் சில தைரியமான முடிவுகளை எடுப்பார். தனது விருப்பம் போல் ஆடுவார். நெருக்கடிகளை அருமையாக சமாளிப்பார். ஆங்கில பத்திரிக்கை ஒன்றிற்கு மெக்ராத் அளித்த பேட்டியில், இந்த 5 பேர்கள் தான் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் வியந்து பார்த்த வீரர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

## முறிந்த காதலுக்கு காரணம் சொல்கிறார் ஷேன் வோர்ன்



நடிகைஎலிசபெத்ஹார்லியுடனான காதல் முறிந்து பல நாட்கள் ஆகிவிட்ட நிலையில் அதற்கான காரணத்தை கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார். 50 வயதாகும் எலிசெபத்தும், 45 வயதாகும் ஷேன் வோர்னும் 3 ஆண்டுகளாக தீவிரமாக காதலித்து வந்தனர். கடந்த 2013ம் ஆண்டு இவர்களின் காதல் முறிந்து இருவரும் பிரிந்துவிட்டனர். இந்நிலையில் ஒரு ஆங்கில பத்திரிகைக்கு ஷேன் வோர்ன் கொடுத்த பேட்டியில் எலிசபெத் ஹார்லியுடனான காதல் முறிந்ததற்காக காரணங்களைப் பற்றிப் பேசியுள்ளார். இது பற்றி அவர் கூறுகையில், எங்களுக்குள் எப்போதுமே அருமையான டின்னர் இரவுகள் அமையும். ஆனால், அந்த இரவுகள் தொடர்ந்து நீடிக்கவில்லை. இருவரும் அவரவர் வேலையில் பிசியாக இருந்து விட்டோம்.

அதுவும் உறவில் சிக்கல் வர ஒரு காரணம். நான் அப்போது தான் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்துஓய்வுபெற்றிருந்தேன். நான்கிரிக்கெட் 'கமெண்டரி' பக்கம்கவனம் செலுத்தினேன். மீண்டும் கிரிக்கெட் ஆட ஆரம்பித்தேன். அதே சமயம் ஹர்லி நடிப்பு, மொடலிங் என சென்றுவிட்டார். மொத்தத்தில் எங்களுக்குள் நேரம் இல்லாமல் போனது. இதுவே இருவரும் பிரிய காரணமாக அமைந்துவிட்டது. பிரிந்தாலும் கூட இருவரும் அவ்வப்போது நண்பர்களாக சந்தித்துக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## 'வேகப்புயல்' ரஹ்மானுக்கு சென்னை அணியில் வாய்ப்பு



இந்தியாவில் நடக்கும் ஐபிஎல் தொடரில் வங்கதேச வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிஜுர் ரஹ்மான், சென்னை அணியில் இடம்பெற வாய்ப்பு உள்ளது. இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் வங்கதேச அணியின் அறிமுக இளம் பந்துவீச்சாளர் முஸ்தபிஜுர் ரஹ்மான் தனது பந்துவீச்சில் இந்திய வீரர்களை மிரட்டினார். இவரது அபார பந்துவீச்சால் வங்கதேச அணி ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாறு படைத்துள்ளது.

இந்நிலையில் வங்கதேச அணித்தலைவர் மொர்டசா, ரஹ்மானை ஐ.பி.எல் தொடரில் சென்னையில் சேர்த்துக் கொள்ளுமாறு டோனியிடம் பரிந்துரை செய்துள்ளதாகவும், அதற்கு டோனியும் சம்மதம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

## குழப்பத்தில் குமார் சங்கக்கார - மேத்யூஸ்

டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து சங்கக்கார இன்னும் முடிவு செய்யவில்லை என்று இலங்கை அணித்தலைவர் மேத்யூஸ் தெரிவித்துள்ளார். இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்டக்காரர் சங்கக்கார, ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட நிலையில், சொந்தமண்ணில் நடக்கவிருக்கும் இந்தியாவுக்கு எதிரான தொடரோடு டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

இதுபற்றி இலங்கை அணித்தலைவர் மேத்யூஸ் கூறுகையில், சங்கக்கார டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து தெரிவாளர்களுடன் தொடர்ந்து ஆலோசித்து வருகிறார். அவர் இலங்கை அணிக்காக அதிக பங்களிப்பு அளித்துள்ளார். அவரது ஓய்வு எங்களுக்கு மிகப்பெரிய இழப்பு. ஜெயவர்த்தன, சங்கக்காரவின் இடங்களை இளம் வீரர்களை கொண்டு நிரப்புவது கடினமான விடயமாகும் என்று கூறியுள்ளார்.



## ஜேர்மன் வீரருடன் ஊர்சுற்றி வரும் 'அழகுப்புயல்' இவானோவிச்



செர்பிய டென்னிஸ் 'அழகுப்புயல்' இவானோவிச், ஜேர்மன் கால்பந்து வீரர் ஸ்கீவன்ஸ்டீகருடன் நெருக்கமாக பழகி வருகிறார். நம்பர்-1 வீராங்கனையாக வலம் வந்த இவானோவிச், தற்போது 6வது இடத்தில் இருக்கிறார். இவர் ஸ்கீவன்ஸ்டீகருடன் கொண்டுள்ள நட்பு மிக ஆழமாக உள்ளது. இருவரும் பல இடங்களுக்கு ஒன்றாகச் சென்று வருகின்றனர்.

ஸ்கீவன்ஸ்டீகருடன் உள்ள நட்பு குறித்து இவானோவிச் கூறுகையில், தற்போது ஒரு புதிய வாழ்க்கையை தொடங்கியது போல உணர்கிறேன். முன்பு எல்லாம் மற்ற விடயத்திற்கு எனக்கு நேரம் இருக்காது. தற்போது போட்டி இல்லாத நேரங்களில் நண்பருடன் கடற்கரையில் உலா மற்றும் ஷொப்பிங்கிற்கு செல்கிறேன். இதை தொடங்கும் முன் சற்று தயக்கமாக, குற்ற உணர்ச்சியுடன் இருந்தது. ஆனால் தற்போது அதிகமான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

## வீராங்கனை மீது கொடூர தாக்குதல் நடத்திய கும்பல்



பாலியல் தொல்லை கொடுத்ததாக இருவர் மீது கபடி வீராங்கனை டாலி சிங் புகார் அளித்ததைத் தொடர்ந்து, அவர் ஒரு கும்பலால் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் விளையாட்டு வீரர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த மாதம் டாலி சிங், வீட்டில் தனியாக இருந்தபோது இரு வாலிபர்கள் அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளனர். இதைத் தொடர்ந்து அவர் இந்த சம்பவம் பற்றி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்நிலையில் கடந்த 15ம் திகதி தனது பயிற்சியை முடித்துவிட்டு டாலி சிங் வீடு திரும்பிய போது 12 பேர் கொண்ட கும்பல் அவரை சரமாரியாக தாக்கியுள்ளது. இதில் அவருக்கு முகத்தில் படுகாயம் ஏற்பட்டது. இது பற்றியும் அவர் பொலிசில் புகார் கொடுத்துள்ளார்.

ஆனால் புகார் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத பொலிசார், முகத்தில் ஏற்பட்ட காயத்துக்கு உரிய சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யவில்லை. தற்போது டாலி சிங் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். இந்தத் தாக்குதலுக்கு அந்த 2 வாலிபர்கள் பின்புலமாக செயற்பட்டிருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.


## முதல் 10 இடங்களுக்குள் 3 இந்திய வீரர்கள்



ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீரர்களின் தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ளது. இதில் தென் ஆபிரிக்க அணித்தலைவர் டிவில்லியர்ஸ் வழக்கம்போல் 902 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார். இவருக்கு அடுத்தடுத்த இடத்தில் இலங்கை வீரர் குமார் சங்கக்கார, ஹாசிம் ஆம்லா இடம் பெறுகின்றனர். இவரைத்தொடர்ந்து இந்திய அணியின் துணைத்தலைவர் விராட் கோஹ்லி 4வது இடத்தை பிடிக்கிறார்.

வது இடத்தில் இலங்கை அணியின் சகலதுறை வீரர் டில்ஷான் இடம்பெற்றுள்ளார். ஷிகர் தவான் 777 புள்ளிகளுடன் 6வது இடத்தில் இருந்து 7வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். அதேவேளையில் இந்திய அணித்தலைவர் டோனி 734 புள்ளிகளை பெற்று 8வது இடத்தை பிடித்துள்ளார். வங்கதேச தொடரை இழந்தாலும், ஒருநாள் போட்டி அணிகளின் தரவரிசையில் இந்திய அணி தொடர்ந்து 2வது இடத்தில் நீடிக்கிறது. அதே சமயம் வங்கதேச அணி 7வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

## பரிசாக கிடைத்த மோட்டர் சைக்கிளை விற்ற ஷிகர் தவான்



இந்திய அணியின் முன்னணி வீரரான ஷிகர் தவான், வங்கதேசத்தில் தனக்கு பரிசாகக்கிடைத்த விலை உயர்ந்த மோட்டார் சைக்கிளை விற்றுவிட்டு நாடு திரும்பியுள்ளார். வங்கதேச அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் 75 ஓட்டங்கள் அடித்ததற்காக ஷிகர் தவானுக்கு விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது.

ஆனால் தனக்கு மோட்டார் சைக்கிள் வேண்டாம் என்றும், அதற்கு இணையான ரொக்கப்பரிசு வேண்டும் எனவும் ஷிகர் வங்கதேச கிரிக்கெட் வாரியத்திடம் கோரிக்கைவிடுத்துள்ளார். இவரது கோரிக்கையை கிரிக்கெட் வாரியமும் ஏற்றுக்கொண்டது.

இது தொடர்பாக வங்கதேச கிரிக்கெட் வாரியத்தெரிவுக்குழு தலைவர் ஃபாருக் அகமது கூறுகையில், மோட்டார் சைக்கிளுக்குஇணையானரொக்கப்பரிசை ஷிகர் தவான் கேட்டுக் கொண்டதால், அவர் இந்தியா சென்றதும் அதற்கான தொகை அவருக்கு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## உலகின் சிறந்த சகலதுறை வீரரான ஷாகிப் அல் ஹசன்

வங்கதேச அணியின் ஷாகிப் அல் ஹசன் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டியிலும் சிறந்த சகலதுறை வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் வாரியம் சகலதுறை வீரர்களுக்கான தரவரிசைப்பட்டியலை வெளியிட்டது. இதில் சாகிப் அல் ஹசன் 408 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்தார். இவருக்கு அடுத்த இடத்தில் இலங்கை வீரர்களான டில்ஷான் (404 புள்ளிகள்), மேத்யூஸ் (378 புள்ளிகள்) 2 மற்றும் 3வது இடங்களில் உள்ளனர்.

மேலும் பல்க்னர் (361), ஹபீஸ் (343), மேக்ஸ்வெல் (318), ஜடேஜா (288), டுமினி (267), வாட்சன் (266), நபி (256) ஆகியோர் 4 முதல் 10 இடங்களுக்குள் இருக்கின்றனர்.

# உலகச் செய்திகள்

## அலட்சியத்தால் 70 மில்லியன் குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம்



சர்வதேச நாடுகளின் அலட்சியத்தால் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக அடுத்த 15 ஆண்டுகளுக்குள் சுமார் 70 மில்லியன் குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐ.நா சபையில் ஒரு அங்கமாக விளங்கும், குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பான Unicef மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. அதில், சர்வதேச அளவில் போதுமான ஊட்டச்சத்து இல்லாமல் தவித்து வருவதுடன், அவர்களின் இறப்பு எண்ணிக்கையும் அதிகரித்து வருவதுவேதனை அளிக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு குழந்தையானது தனது 5 வயதை முடிப்பதற்குள் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக இறக்க நேரிடுகிறது. ஊட்டச்சத்து குறைப்பாட்டை தடுக்க முடியும். ஆனால், உலக நாடுகள் அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை என ஐ.நா கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பேசிய Unicef தலைமை அதிகாரியான Anthony Lake, இந்த பூதாகரமான பிரச்சினையை முற்றிலுமாக தீர்க்க உலக நாடுகள் ஏழை மற்றும் பின்தங்கிய குழந்தைகளுக்கு உதவ முன்வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தற்போதைய காலத்திலும் கூட, உலகம் முழுவதிலும் சுமார் 119 குழந்தைகள் போதுமான ஊட்டச்சத்து மற்றும் ஆதரவு இல்லாமல் போராடி வருகிறார்கள்.

ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6 மில்லியன் குழந்தைகள் இறக்கின்றனர். ஆனால், கடந்த சில ஆண்டுகளில் இறப்பு எண்ணிக்கை குறைந்துள்ளது. 25 வருடங்களுக்கு முன்னர் குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை 12.7 மில்லியனாக இருந்தது என்றும், அது தற்போது 6 மில்லியனாக குறைந்துள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தண்ணீரில் இறக்கப்பட்ட உலகின் பெரிய கப்பல்



பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய சொகுசு கப்பல் சமீபத்தில் வெற்றிகரமாக தண்ணீரில் இறக்கப்பட்டுள்ளது. உலகின் மிகபெரிய கப்பலை தயாரிக்கும் முயற்சியில் பிரான்ஸ் ஈடுபட்டுள்ளது. ஹார்மோனி ஆப் தி சீஸ் என பெயரிடப்பட்டுள்ள அந்த கப்பலின் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்றுவருகின்றன. இந்நிலையில் இந்தக் கப்பல் தற்போது வெற்றிகரமாக தண்ணீரில் இறக்கிவிடப்பட்டுள்ளது. இந்த கப்பலின் நீளம் 362 மீற்றராகும். மேலும் இது ஈபிள் டவரை விட 50 மீற்றர் உயரமானது என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து செயின்ட்-நசைர் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வந்தது. மேலும் இறுதிக்கட்ட பணிகள் முடிந்து அடுத்த ஆண்டு தனது முதல் பயணத்தை தொடங்கும்போது இதன் எடை இரண்டு லட்சத்து 27 ஆயிரம் டன் ஆக இருக்கும் எனது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட "அல்லுரே ஆப் தி சீஸ், ஒயாசிஸ் ஆப் தி சீஸ்" ஆகிய கப்பல்கள் 65 மீற்றர் அகலமும் இரண்டு லட்சத்து 25 ஆயிரம் டன் எடையும் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மிகப்பெரிய கப்பலை கட்டும் பணியில் 2500 ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இதன் இறுதிக்கட்ட பணிகளுக்கு 90 ஆயிரம் சதுர மீற்றர் (968700 சதுர அடி) நீளம் கொண்ட கார்பெட்டும், ஐந்து லட்சம் லிட்டர் பெயிண்டும் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்த ஆண்டு மே மாதம் சவுதாம்ப்டனில் இருந்து ஸ்பெயினின் பார்சிலோனாவுக்கு முதல் பயணத்தை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மிக பிரமாண்டமாக உருவாகி வரும் இந்த கப்பலில் 6360 பயணிகளும், 2100 ஊழியர்களும் பயணம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெக்ஸொமா ஏரியில் ஏற்பட்ட திடீர் நீர்ச்சுழல்




அமெரிக்காவில் உள்ள டெக்ஸொமா ஏரியில் திடீரென ஏற்பட்ட பெரிய நீர்ச்சுழல் மக்களிடையேஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் ஓக்லஹோமா மற்றும் டெக்ஸாஸ் ஆகிய மாகாணங்களின் எல்லையில் டெக்ஸொமா நீர்த்தேக்கம் அமைந்துள்ளது. அப்பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருவதால் ஏரியில் நீர் மட்டம் உயர்ந்தது. இதையடுத்து ஏரியில் இருந்து நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏரியில் திடீரென பெரிய குழி ஏற்பட்டுள்ளது. பின்னர் அது பெரிய அளவிலான நீர்ச்சுழலாக மாறியுள்ளது.

அது ஒரு படகை மூழ்கடிக்கும் வகையில் பெரியதாக இருந்ததாக கூறப்படுகிறது. இதைப்பார்த்த அங்கிருந்தவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். இது குறித்து ஏரியின் துணை மேலாளரான பார்கே கூறியதாவது, இந்த நீர்ச்சுழல் ஏற்பட்ட ஒரு சாதாரண நிகழ்வு தான். பொதுவாக ஏரியில் இருந்து தண்ணீரை திறந்து விடும்போது இவ்வாறு ஏற்படும் என்று கூறியுள்ளார்.

## சூரியனுக்கு அருகில் நெருங்கிய நாசா




சூரியனை மிக அருகில் படம்பிடித்து அதன் புகைப்படங்களை நாசா ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டு, அட்லஸ் 5 ரொக்கெட் மூலம் சோலார் டைனமிக்ஸ் (Solar Dynamics) தொலைநோக்கி விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த தொலைநோக்கி அதிநவீன கெமராக்கள் மூலம் பல்வேறு புகைப்படங்களை எடுத்து அனுப்பி வருகிறது. இந்நிலையில் மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் விதமாக, சூரியனை பல்வேறு கோணத்தில் படம்பிடித்து அனுப்பியுள்ளன.

சூரியனில் நடைபெறும் நிகழ்வுகள், கொந்தளிப்புகள் போன்றவற்றை இந்த புகைப்படங்கள் மக்களுக்கு எடுத்துரைக்கின்றன. மேலும், இந்த தொலைநோக்கி, சூரியனில் உள்ள பல ஆயிரம் மடங்கு வலிமை மிகுந்த காந்தப்புலமான பிளாஸ்மா வளையங்களை துல்லியமாக படம் பிடித்து அனுப்பியுள்ளது. இந்த காந்தப்புலங்களிலிருந்து சூடான வாயுக்கள் வெளியேறுகின்றன, அதன் பின்னர்பிரகாசமானவெளிச்சம்தோன்றும் காட்சிகள் படம்பிடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மக்களுக்கு பயனுள்ளவையாக இருக்கும் என கோடார்ட் விண்வெளி மைய அதிகாரி டொக்டர் அலெக்ஸ் யங் (Alex Yung) கூறியுள்ளார்.

## நடுவானத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர்




நோர்வே நாட்டிலிருந்து பறந்த விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக விடுக்கப்பட்ட மிரட்டலை தொடர்ந்து விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நோர்வேநாட்டிற்குச்சொந்தமானRyanair FR 7023, என்ற போயிங் விமானம் 160 பயணிகளுடன் நோர்வேயின் தலைநகரான ஓஸ்லோ விமான நிலையத்திலிருந்து கிளம்பியுள்ளது. போலந்து நாட்டில் உள்ள Warsaw Modlin சர்வதேச விமான நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த அந்த விமானநிலைய அதிகாரிகளுக்கு ஒரு மர்ம அழைப்பு வந்துள்ளது.

அதில், விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகவும் அது எந்த நேரத்திலும் வெடிக்கும் என மிரட்டல் விடுக்கப்பட்டது. அதேநேரத்தில், விமானமும் சென்றடைய வேண்டிய விமான நிலையத்திற்கு அருகே சென்று கொண்டிருந்ததால் அதனை உடனடியாக தரையிறக்குமாறு விமானிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவசரமாக விமானம் தரையிறக்கப்பட்டதும், அதில் இருந்த பயணிகள் மற்றும் விமான குழுவினரை வெளியேற்றிய வெடிகுண்டு சோதனை நிபுணர்கள் விமானத்தை சல்லடையிட்டு தேடினார்கள். ஆனால், விமானத்தில் சந்தேகிக்கும் வகையில் எந்த பொருளும் இல்லாததால், விமான நிலையத்திற்கு வந்த அழைப்பு பொய்யானது என பொலிசார் கண்டு பிடித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பேசிய போலந்து நாட்டு பொலிஸ் அதிகாரியான Mariusz Mrozek, விமானத்தில் வெடிபொருள் இருப்பதாக பொறுப்பற்ற முறையில் பொய் தகவல் அளித்த சம்பவம் கண்டிக்கத்தக்கது. தொலைப்பேசி அழைப்பு வந்த எண்களை ஆதாரமாக வைத்து அந்த அழைப்பு வந்த வீட்டிலிருந்து சுமார் 48 வயதுடைய நபரை பொலிசார் கைது செய்ததுடன், இந்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் ஐ.எஸ் தீவிரவாதிகளின் பலம்



ஐ.எஸ் தீவிரவாதிகளின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதற்கு உதாரணமாக சிரியாவில் உள்ள பழமை வாய்ந்த கல்லறைகளை அழித்துள்ளனர். கடந்த மாதம் சிரியாவின் பால்மைரா (Palmyra) நகரை ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றினர். பால்மைராவில் உலகப்புகழ்பெற்ற வரலாற்று சின்னங்கள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நகரை கைப்பற்றிய நாள்முதல் அங்குள்ள மக்களை துன்புறுத்தி வரும் ஐ.எஸ் அமைப்பு, தற்போது இரண்டு பழமை வாய்ந்த கல்லறைகளை அழித்துள்ளது.

அதில் ஒன்று முகமது நபியின் மைத்துனரான இமாம் அலியுடையது, மற்றொரு கல்லறை 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து வந்த நிஸார் அபு பாஹா என்ற துறவியுடையது என்று சிரியாவின் அரும்பொருட்கள் துறைத்தலைவர் மாமூன் அப்துல்கரீம் கூறியுள்ளார். ஏற்கெனவே ஐ.எஸ். பயங்கரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நிம்ருத், ஹத்ரா ஆகிய புராதன நினைவுச் சின்னங்களை அழித்து, அதன் விடியோ காட்சியை இணையதளங்களில் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## சாதனை படைத்த பிரித்தானிய மருத்துவர்கள்

மனிதர்கள் உயிர் வாழ அவசியமான ரத்தத்தின் தேவை சர்வதேச அளவில் குறைந்து வரும் நிலையில், இதனை ஈடுசெய்ய 'செயற்கை ரத்தத்தை' தயாரித்து அதனை பரிசோதிக்கும் முயற்சியில் பிரித்தானிய மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர். சர்வதேச அளவில் விபத்துக்கள் அதிகரித்து வருவதால், ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு ரத்தத்தை பரிமாற்றம் செய்யும் தேவையும் அதிகரித்து வருகிறது. உலகளவில் ஆண்டுக்கு 12 மில்லியன் நபர்களுக்கு ரத்தம் தேவைப்படுகிறது. ஆனால், ரத்த வங்கிகளில் உள்ள ரத்தத்தின் இருப்பு என்பது 8 மில்லியன் நபர்களுக்கு மட்டுமே தேவையானதாக இருந்து வருகிறது.

இந்தப் பற்றாக்குறையை போக்க பிரித்தானியாவில் உள்ள National Health Service, 'synthetic blood' என்று சொல்லக்கூடிய செயற்கை ரத்தத்தைத் தயாரிக்கும்பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. மனிதன் உயிர் வாழ ரத்தம் மிக அவசியமானது என்ற உண்மையை 1940ம் ஆண்டுகளிலேயே மருத்துவர்கள் உணர்ந்துள்ளனர். அது மட்டுமல்லாமல், ரத்தத்தை செயற்கையாகத் தயாரிக்கும் ஆய்வுகள் மற்றும் அதற்கான பணிகள் அதே ஆண்டிலேயே தொடங்கியுள்ளது. பல ஆண்டுகள் முயற்சிக்கு பின்னர், அமெரிக்காவில் உள்ள கலிபோர்னிய மருத்துவர்கள் முதன் முதலாக 'செயற்கையான ரத்தத்தை' தயாரித்து அதனை பரிசோதனை செய்தனர்.

ஆனால், உடலில் ஏற்றப்பட்ட இந்த செயற்கை ரத்தம் சுமார் 4 மணி நேரம் மட்டுமே செயற்பட்டது. மனிதனின் வாழ்நாள் முழுவதும் ரத்தம் இயற்கையாகவே செயற்படும் வகையில் ரத்தம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதால், நவீன முறைகளில் செயற்கை ரத்தத்தை தயாரிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றது. இந்நிலையில், பிரித்தானியாவின் National Health Service செயற்கை ரத்தத்தை தயாரிக்கும் பணியை பல வருடங்களுக்கு முன்னர் தொடங்கி இருந்தாலும், அதனை வெற்றிகரமாக பரிசோதிக்கும் பணி இன்னும் இரண்டு ஆண்டுகளில் நடைபெறும் என தற்போது தெரிவித்துள்ளனர். மனிதனின்உயிர்ஆதாரமானஸ்டெம்செல் எனப்படும் பரம்பரை உயிர் அணுக்களை, குழந்தை பிறந்ததும் அதன் தொப்புள் கொடியில் உள்ள ரத்தத்திலிருந்து சேகரிக்கப்படுகிறது. இந்த ஸ்டெம் செல்களை பயன்படுத்தி புதிதாக ரத்த செல்களை உருவாக்க முடியும். இந்த ரத்த செல்களையும், சேகரிக்கப்பட்ட ரத்தத்தையும் மனித உடம்பில் செலுத்தி அது எதிர்மறை விளைவுகள் இல்லாமல் செயற்படுகிறதா என பரிசோதனை செய்யப்படும்.

# விந்தை உலகம்

## 18 வயதில் 144 வயதுடைய பெண்மணி போல் தோற்றமளிக்கும் இளம் பெண்


பிலிப்பைன்ஸ் நாட்டின் Ana Rochelle Pondare எனும் பெண் பார்ப்பதற்கு 144 வயதுடையவர் போல் தோற்றமளித்தாலும் மிக அண்மையில் தான் அவரது 18 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளார். இவர் தனது சிறு வயதிலேயே Progeria என்ற அரியவகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். மரபணு குறைபாடு காரணமாக இவரது வளர்ச்சி சாதாரணமானவர்களை விட 10 மடங்கு அதிகமாக இருக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 14 வயதினிலேயே உயிரிழந்து விடுவர். Ana Rochelle Pondare தனது 18 ஆவது வயதில் காலடி எடுத்து வைத்திருக்கிறார். இதுவே அவரது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடக் காரணமாக அமைந்துள்ளது.



## மனிதனுடைய முகம்போல காட்சியளிக்கும் ஒரு கற்பாறை

கனடா நாட்டில் உள்ள மலைத்தொடர் ஒன்றில், மனிதனுடைய முகம்போல காட்சியளிக்கும் ஒரு கற்பாறை உள்ளது. இதனை Hank Gus என்னும் நபர் கவனித்துள்ளார். அவர் விமானத்தில் பயணித்தவேளை கீழ் உள்ள அழகான மலைத்தொடர்களை புகைப்படம் எடுத்துள்ளார். அதேவேளை அதில் மனிதனுடைய முகம் இருப்பது போன்று ஒரு பெரும் பாறை இருப்பதையும் அவர் கவனித்துள்ளார்.. இதனையடுத்து அவர் தமது புகைப்படங்களை பின்னர் பார்த்துவியந்துபோனார். இருப்பினும் அந்த மலை எங்கே இருக்கிறது என்று அவருக்குத் தெரியாது. கடந்த 2 வருடங்களாக அந்த மலை இருக்கும் இடத்தை தேடி அலைந்த Hank Gus, இறுதியாக அமைந்துள்ள இடத்தை கண்டுபிடித்து. பின்னர் வாடகைக்கு ஒரு சிறிய விமானத்தை அமர்த்தி அதன் அருகே சென்று புகைப்படம் எடுத்துள்ளார். இதுவரை எவரும் இந்த மலையின் இப்பகுதியை புகைப்படம் எடுத்ததே இல்லையென்கிறார்கள்.



அறிவு மைய அபிவிருத்தியை உறுதி செய்து கொள்வதற்காக ஆரம்பப்பாடசாலைகள் மற்றும் இடைநிலைப்பாடசாலைகளை மீளமைக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கிட்டின் மூலம் வவுனியா தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயத்தில் நிர்மானிக்கப்பட்ட தொழிநுட்ப ஆய்வுகூட திறப்பு விழா அதிபர் திரு.செ.பவேந்திரன் தலை மையில் 25.06.2015 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட பல அதிதிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இந்நிகழ்வினைச் சிறப்பித்தனர்.




## பாலைவனத்தின் மத்தியில் கண்கொள்ளாக்காட்சியாக திகழும் பூங்கா

துபாயிலுள்ள 18 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மிராக்கிள் பூங்காவானது தற்போது 45 மில்லியனுக்கு மேற்பட்ட வர்ணமயமான மலர்களைக் கொண்டமைந்துள்ளது. இந்த பூங்கா 2003ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கு மலர்கள் கண்ணைக்கவரும் அலங்கார வடிவமைப்புகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.






















RAVI LEARNERS ரவி லேணர்ஸ்




வன்னி மண்ணில் ஆண், பெண் இருபாலாருக்கும் , அனைத்து வாகனங்களுக்குமான பயிற்சிகளை திறன்பட வழங்கி, அரச அங்கிகாரம் பெற்ற சாரதி அனுமதிப்பத்திரத்தை விரைவாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

| | | | |
|---|---|---|---|
| முல்லை வீதி, | தண்ணீருற்று, | மாங்குளம் வீதி, | துணுக்காய் வீதி, |
| புதுக்குடியிருப்பு. | முள்ளியவளை. | ஒட்டுசுட்டான். | மல்லாவி. |
| 0777846448 | 0771321885 | 0772035504 | 0779102114 |

கண்டி வீதி, காக்கா கடைச் சந்தி , கிளிநொச்சி    Tel:- 0215670355, 0777526658


இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 28.06.2015 அன்று வெளியிடப்பட்டது.